தண்ணீருக்கு வந்த தாகம்

நாட்டார் மரபில் எழுந்த புதிய கவிகளின் தொகுப்பு

எழுகவி எம்மையெம். ஜமீல்

வெளியீடு :
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
கிழக்கு மாகாணம்

'எழுகவி' எம்மையெம். ஜெலீல்

தண்ணீருக்கு வந்த தாகம்

நாட்டார் மரபில் எழுந்த புதிய கவிகளின் தொகுப்பு

வெளியீடு
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
கிழக்குமாகாணம்

தண்ணீருக்கு வந்த தாகம் :

(நாட்டார் மரபில் எழுந்த புதிய கவிகளின் தொகுப்பு)

ஆசிரியர்: எம்ஐஎம். ஜெவீல்©. விலாசம்: 82ஏ, வடிகால் வீதி, அக்கரைப்பற்று – 14, இலங்கை. தொலைபேசி: 071 44 69 217 முதற்பதிப்பு : ஐப்பசி 2013. வெளியீடு: பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கிழக்கு மாகாணம், திருகோணமலை. கணினி வடிவமைப்பு: ஜனாபா பழீலா குத்தூஸ் (எப்ஃகே.கொம்), அக்கரைப்பற்று. அச்சுப் பதிப்பு: சிற்றிபொயின்ற், அக்கரைப்பற்று. பக்கம்: 110.

Thanneerukku Vantha Thaakam :

(Collection of new poems Derived from Folk Tradition)

Author: MIM. Jaleel©, Address: 82/A, Drainage Road, Akkaraipattu - 14, Sri Lanka, Mobile: 071 44 69 217, First Edition: October -2013, Published by: Department of Cultural Affairs, Eastern Province, Trincomale. Type Setting & Layout by : Mrs. Faleela Khuthoos (Effke.com)- Akkaraipattu, Printed By: Citypoint, Akkaraipattu, Pages: 110

எனது தாயார்

மர்ஹூம் முகம்மது பாத்தும்மா முகம்மது இப்றாகிம்

அவர்களுக்கே

சமர்ப்பணம்...!

பதிப்புரை

2013ம் ஆண்டு கிழக்கு மாகாண கலை இலக்கிய விழாவிற்கு இணையாக எமது திணைக்களத்தின் நிதி ஒதுக்கீட்டு அனுசரணையுடன் கிழக்கு மாகாணத்தில் உள்ள சிங்கள, தமிழ், முஸ்லிம் புதிய எழுத்தாளர்கள் மற்றும் சிறுவர்களின் ஆக்கங்களைக்கொண்ட நூல்களை அச்சிட்டு அவற்றுள் சிலவற்றை வெளியீடு செய்வதற்கு எமது திணைக்களம் ஒழுங்கமைப்பினை மேற்கொண்டுள்ளது.

இந்நூல்களின் பிரதிபலனாக கன்னி எழுத்தாளர்களுக்கு தமது படைப்புக்களை முதல் தடவையாக வெளியிடுவதற்கு ஏதோ ஒரு வகையில் பொருளாதார அனுசரணை வழங்கினால் அது அவர்களுக்கு தமது இரண்டாவது ஆக்கத்தை தொகுத்து சிறப்பாக வெளியீடு செய்வதற்கு ஒரு ஊக்குவிப்பாவதுடன் அவர்களின் ஆக்க நடவடிக்கைக்கு செய்யும் ஒரு வெற்றிகரமான முயற்சியாகவும் இருக்கும்.

தற்காலத்திலுள்ள புதிய ஆய்வாளர்கள் முகம் கொடுக்கும் முக்கியமான சவால் இதுவாகும். எமது திணைக்களத்தினால் இவ்வருடத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ள புதிய எழுத்தாளர்கள், மற்றும் சிறுவர்களுக்கு வழங்கும் உதவிக்கரத்தின் மூலம் கிழக்கு மாகாணத்திலுள்ள சிங்கள, தமிழ், முஸ்லிம் புதிய எழுத்தாளர்களுக்கு அவர்களது ஆக்கங்களை மென்மேலும் முன்னேற்றுவதற்கு இது மிகவும் ஒத்துழைப்பாக இருக்கும்.

கிழக்கு மாகாணத்திலுள்ள புதிய எழுத்தாளர்கள் மற்றும் சிறுவர்களுக்காக மேற்கொள்ளப்படும் இந்நற்காரியத்தின் மூலம் கிழக்கு மாகாணத்தில் புதிய எழுத்தாளர்கள் மட்டுமல்லாது புதிய புதிய ஆக்கங்கள் மற்றும் ஆய்வாளர்களையும் நாளை எம்மால் உருவாக்க முடியும் என நம்புகின்றேன்.

எமது பிரார்த்தனையும் அதுவே ஆகும்.

திரு. D.W.U. வெலிக்கல
பணிப்பாளர்
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
கிழக்கு மாகாணம்

அம்பாரை மாவட்ட கலாசார ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்

தேசகீர்த்தி ஏ.எல். தௌபீக் அவர்களிடமிருந்து...

கிழக்கு மாகாணத்தில் வாழ்ந்து வரும் மூவின மக்களிடையே உள்ள பாரம்பரிய பண்பாட்டுக்கலை வளர்ச்சிக்கு எமது கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் பாரிய பங்களிப்புக்களைச் செய்து வருகிறது அந்தவகையில் பாரம்பரிய கலைகளை அம்பாரை மாவட்டத்தில் முன்னெடுத்துச் செல்ல வேண்டியதன் தேவை உணர்ந்து பிரதேச, மாவட்ட, மாகாண மட்டப் போட்டிகள் பயிற்சிப் பட்டறைகளை அண்மைக்காலமாக எமது திணைக்களத்தின் ஊடாக மூவின கலைஞர்களையும் உள்ளடக்கி யதாக அவ்வப் பிரதேசங்களில் நடாத்திவருவது குறிப்பிடத்தக்கது.

அந்த வகையில் முஸ்லிம் பாரம்பரிய கலைகளில் ஒன்றான நாட்டார்பாடல் முஸ்லிம் பிரதேசங்களில் என்றும் அழியாத்தடம் பதித்து வருவதைக் காணலாம். நாட்டார் பாடல்களினூடாக பல் வகைப்பட்ட உணர்வுகளை வெளிப்படுத்தும் கலைஞர்கள் விழா மேடைகளிலும், போட்டி நிகழ்வுகளிலும் பாடிவருவதை வழக்கமாக் கொண்டிருக்கின்றனர். ஆனால் அதனை மக்கள் மயப்படுத்தும் எண்ணம் கொண்டு தன்னால் இயற்றப்பட்ட நாட்டார் பாடல்களை பத்திரிகைகளினூடாக வெளிக் கொணர்ந்த கலைஞர் "எழுகவி" எம்.ஐ.எம் ஜெலீல் அவர்களின் "தாய்க்கொரு தாலாட்டு", "பாக்கிறது நிச்சயந்தான்", "கூலியெண்டா செப்பமென்ன" ஆகிய பாடல்களை அண்மைக்காலங்களில் காணக்கிடைத்தது.

பாடசாலைக் காலம் தொட்டு இன்றுவரை பல நிகழ்வுகளில் மிகவும் ரம்மியமான தொனியில் பாடிவரும் நண்பர் ஜெலீல் எனது பாடசாலைப் பருவத்திலிருந்து அறியப்பட்டவர் தனது பதினேழாவது வயது முதல் சமூக சேவையில் ஈடுபடத் தொடங்கிய இவர் இன்று வரை பல அரச சார்பு அமைப்புக்களின் தலைவராகவும், செயலாளராகவும் இருந்து

வருவது குறிப்பிடத்தக்கது முப்பது ஆண்டுகளுக்கு மேலாக சமூகப்பணியுடன் கலைத்துறையிலும் பங்காற்றிவருவது மட்டும்மல்லாது எழுத்துக்கலை, செதுக்கல், ஓவியம் வரைதல் இன்னும் பல்வேறுபட்ட கலைநுட்பம் தொழிநுட்பங்களிலும் ஈடுபட்டுவருகின்றார்.

ஆனால் நாட்டார்பாடல்கள் மீது அவர்கொண்டமோகம் "தண்ணீருக்கு வந்த தாகம்" என்னும் இத்தொகுப்பின் மூலம் ஜெலீல் அவர்களை இனம் காட்டி நிற்கிறது. இக்கலை அருகி, கருகி, மருவி விடாமல் உயிர்ப்பித்துக் கொண்டிருக்கும் இம் முயற்ச்சியானது பல தாகித்த உள்ளங்களுக்கு பயனுள்ளதாக அமையும் என எதிர்பார்க்கின்றேன். இருபத்தேழு தலைப்புக்களைக் கொண்டு முன்னூறுக்கும் மேற்பட்ட செய்யுள்களைக் கொண்ட இந்நாட்டார் பாடல்களை காலத்தின் தேவையுணர்ந்து வெளியீடு செய்வதில் எமது திணைக்களம் மகிழ்ச்சியடைகிறது.

இன்னும் பல ஆக்கங்களை வெளியிட இறைவன் துணைபுரிய வேண்டும் எனப்பிரார்த்திக்கின்றேன் "எழுகவி" எம்.ஐ.எம் ஜெலீல் அவர்களின் இத்தொகுப்பு வெற்றிபெற எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மாவட்ட செயலகம்

அம்பாரை.

2013.10.29

ஆசியுரை

"எழுகவி" ஜெலீல் அவர்களால் இயற்றப்பட்டு, வெளியிடப்படும் நாட்டார் பாடல்களின் தொகுப்பு நூலுக்கு இவ்வுரையை வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இப்பாடல்களின் தொகுப்பின் மூலம் எழுகவி ஜெலீல் அவர்கள், நமது பிரதேசங்களில் ஒரு காலத்தில் கோலோச்சி மக்கள் மனங்களைக் கவர்ந்து நின்ற நாட்டார் கவிகளை உயிர்ப்பித்து மீண்டும் எம்மையெல்லாம் பழைய நினைவுகளுக்கு அழைத்துச் செல்லும் ஒரு அரிய பணியைச் செய்துள்ளார்.

நவீனத்தைத்தேடி அலையும் இன்றைய காலகட்டத்தில் நமது மண்ணில் வாழ்ந்த முன்னவர்களால் பாடப்பட்ட பாரம்பரிய முதுசொம்களை ஞாபகமூட்டி தொகுத்து சமூகத்தின் கையில் ஒப்படைப்பது என்பது ஒரு சாதாரண செயற்பாடாக எண்ண முடியாத ஒன்றாகும். இக்கலையில் தம்மை முழுமையாக உட்படுத்தி, அதனை இரசித்து அதன் உள்ளார்ந்த அம்சங்களை உள்வாங்கிய ஒருவரினாலேயே அது சாத்தியமாகும். அந்தப் பணியை "எழுகவி" ஜெலீல் கச்சிதமாக செய்து முடித்துள்ளார்.

இந்தத் தொகுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள 27 தொகுதி கவிகளிலும் ஒரு கிராமத்தில் காணப்படும் அத்தனை உணர்வுகளுக்கும் உயிரூட்டப்பட்டுள்ளது. இப்பாடல்களில் கல்வியறிவு, அன்பு, அழகு, ஒழுக்கம், தாய்மை, நட்பு, மற்றும் இறைபக்தி என அம்சங்கள் நீண்டு கொண்டே செல்கின்றன. என்று குறிப்பிட முடியும். இவ்வாறான நிறப்பான செயற்பாடு மூலம் "எழுகவி" ஜெலீல் எல்லோரது மனதிலும் மீண்டுமொரு அமைதியான, அழகான சுகமான கிராமிய வாழ்க்கையை ஞாபகமூட்டி எல்லோரையும் அச்சூழலுக்கு அழைத்துச் செல்வது போன்று பிரமையை ஏற்படுத்தியுள்ளார் என்ற உண்மையை கூறாமல் இருக்க முடியாது.

ஜெலீல் அவர்களின் சிறப்பான கவிப்பணி தொடர எனது இதய பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

U.L.A அஸீஸ்
செயலாளர்,
முதலமைச்சர் மற்றும் உள்ளூராட்சி
புனர்வாழ்வு, கிராமிய அபிவிருத்தி, சுற்றாடல்,
மீள்குடியேற்ற, பிராந்திய நிர்வாக அமைச்சு, கிழக்கு மாகாணம்.

அணிந்துரை

நாட்டார் பாடல் வடிவங்களில் புதிய ஆய்வினை வேண்டி நிற்கும் 'தண்ணீருக்கு வந்த தாகம்'.

நாட்டாரியல் தொடர்பாகப் பல்வேறு கோட்பாடுகளும் அணுகு முறைகளும் வளர்ச்சிபெற்ற நவீன அறிவியல் துறைகளில் ஒன்றாக இன்று, அது கணிக்கப்படுகின்றது. சமூக வரலாற்றோடு மிக நெருங்கிய தொர்பு இத்துறைக்கு உண்டு.

நாட்டார் என்பது ஆங்கிலத்தில் Folk என்பதையே குறிக்கும். நாடோடி, கிராம, நாட்டு என்ற பல சொற்கள் தமிழில் இதற்கு வழங்குகின்றன. வாய்மொழி - Oral என்பதுவும் நாட்டாருக்குச் சமமான ஒரு சொல்லே இது பற்றி மேலும் தே. லூர்து (2000) பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

" 'வாய்மொழி' என்ற தொடர் வாய்வழியாக வெளிப்படுத்தப்படுவதை பரப்படுவதைக் குறிக்கிறது 'நாட்டார்' என்பது வெளிப்படுத்தப்படும் மக்களையும் அதனைப் பயன்படுத்தும் மக்களையும் குறிக்கிறது. வாய்மொழி என்பது ஓரிலக்கியம் உருவாக்கப்படுவதையும், அது மக்கள் முன் பாடப்படுவதையும், மக்களால் பாடப்படுவதையும் குறிக்கும் தொடராகும்; நாட்டார் என்பது அவ்விலக்கியத்தைப் படைப்போரையும் பாதுகாப்போரையும் பரப்புவோரையும், அது புழங்கும் சமுதாயத்தையும் உருவாக்கும் சமுதாயச் சூழலையும் பற்றிய தொடராகும்."

வாய்மொழிப் பாடல்களை வரையறுக்கும்போது அது கட்டப்படும் (Composition) முறை, பரப்பப்படும் (Transmission) முறை, அது நிகழ்த்தப்பெறும் முறை முதலானவை கவனத்திற் கொள்ளப்படுகின்றன. (லூர்து, தே, 2000) இவ்விலக்கியம், எவ்வாறு 'நவீன' என்ற கருத்தைப் பெறுகின்றது என நோக்க வேண்டியுள்ளது.

வாய்மொழி இலக்கியத்தினை பாரம்பரிய விஞ்ஞானம் எனக் குறிப்பிடும் பிரான்ஸிஸ்லி டீட்டி அதனது பிரதான பண்பு வாயினால் பரப்பப்படுவதே ஆகும் என்கிறார்.

வாய்மொழி இலக்கியத்துக்குப் பொதுவான சில பண்புகளை வரையறுக்கின்றனர்.

(i) வாய்மொழியாகப் பரப்பப்படுவது	(Orality)
(ii) மரபு வழிப்பட்டது	(Traditional)
(iii) பல்வேறு வகையாகத் திரிந்து வழங்குவது	(Different Versions)
(iv) ஆசிரியர் இல்லாமை	(Anonymous)
(v) ஒருவித வாய்ப்பாட்டுக்குள் அடங்குவது	(Some kind of formulated structure)

நாட்டார் வழக்காறு அல்லது வாய்மொழி இலக்கிய வகையின் பண்டைத் தன்மை இன்று நிராகரிக்கப்படுகின்றது.

இதனை ஆ. சிவசுப்பிரமணியன் தனது நாட்டார் வழக்காற்றியல் அரசியல் (2005) என்ற நூலில் தெளிவாகக் குறிப்பிடுகின்றார்:

"நாட்டார் வழக்காறுகள் பண்டைச் சமூகத்தின் எச்சங்களைச் சுமந்து கொண்டிருக்கும் .'.பாசில் (fossil) அல்ல. மாறாக அது உயிர்த்துடிப்புள்ளது. புதிது புதிதாகத் தோன்றும் தன்மையது சான்றாக திண்டுக்கல் மாவட்டம் காந்தி கிராமத்தில் குழந்தைகளின் விளையாட்டுப் பாடல் ஒன்றில்,

அந்தா பாரு ரயிலு
ரயிலுக்குள்ள குயிலு
குயிலப் பார்த்துக் கண்ணடிச்சா
ரெண்டு மாசஞ் ஜெயிலு
ஜெயிலு விட்டு வெளிய வந்தா
ரஜனிகாந்து ஸ்டைலு
....."

இவ்வாறு அதற்கான சான்றுகள் பல எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. அதேபோல, இவ்வாறு தோற்றம் பெற்ற பல பாடல்களை ஈழத்திலும் ஆதாரமாகக் காட்ட முடியும்,

"பாராளுமன்றத்தில் பட்டம் கட்டி வாழ்ந்து வந்த
பண்டார நாயக்காவை பாருங்க அவர்ர
பொண்டாட்டி போர பொக்க பாருங்க
சீ. ஏ. ய சீச்சி என்றான் பீ. ஏய விரும்பிக்கிட்டாள்
அகமதையும் சேர்த்துக்கிட்டாளே
அவள் ஆட்சி பீடம் அமைச்சிக்கிட்டாளே."

(றமீஸ் அப்துல்லா, 2001)

இது 1987 ஆம் ஆண்டு கூட்டாட்சியில் அம்பாரை மாவட்ட முஸ்லிம் பிரதிநிதித்துவம் பற்றிக் குறிப்பிடுகின்றது.

அதேபோல, 1989ஆம் ஆண்டு தோன்றிய முஸ்லிம் காங்கிரஸ் என்ற அரசியல் கட்சி, அதன் தலைவர் எம்.எச்.எம் அஷ்ர.ப் பற்றி இவ்வாறு ஒரு பாடல் வழங்குகின்றது.

"சந்தைக்கு சந்தனப்பூ
சபைக்கு குங்குமப்பூ
வாடகைக்கு மல்லிகைப்பூ
வந்திருக்கும் அஷ்ர.ப்பூ

அந்த இந்த மரம் எண்டு
பொது மக்கள் ஆலோசனை பண்ணாதீங்க.
இந்தக் கொட்ட போட்டு
நாட்டிருக்கு குல மரம்" (றமீஸ் அப்துல்லா, 2001)

இவற்றை அடிப்படையாகக் கொண்டு இன்று வழங்குகின்ற வாய்மொழிப் பாடல்களின் பண்புகளைப் பின்வருமாறு வரையறுக்கலாம்.

i) பலவகைப்பட்டதாய் அமைந்திருத்தல்.
(கவி, காப்பு, தாலாட்டு, ஒப்பாரி, காவியம்...)
ii) பல்லின கலாசாரப் பண்பு கொண்டமைந்திருப்பது.
iii) பல்வேறு வகையாகத் திரிந்து வழங்குவது.
iv) செவி வழியாகவும், வேறு நவீன இலத்திரனியல் வழிகளில் பதிவு பெற்று பரவுதலும் வழங்குதலும்.
v) ஆசிரியரை பெரும்பாலும் இனம் காணக் கூடியதாயிருத்தல்.
vi) கலைகளோடு கூடி எழுந்த பாடல்களாகவும் வழங்குதல்.

நவீன வாய்மொழி இலக்கியத்தின் மிகப் பெரும் பண்பாக அமைவது ஆசிரியரை இனம் காணக் கூடியதாயிருத்தல். ஆகும் அந்த ஆசிரியரும் படிப்பறிவில்லாத பாமரராக இருத்தல் குறிப்பிடத்தக்கது. இதேவேளை எழுதப்பட்டுக் கையளிக்கப்படுகின்ற பாடல்களை semi oral அரைநிலை அல்லது ஓரளவு நிலைப்பட்ட வாய்மொழிப்பாடல் என கா. சிவத்தம்பி குறிப்பிடுகின்றார்.

ஆனால், 'தண்ணீருக்கு வந்த தாகம்' என்ற இந்த நாட்டார் பாடல்களின் தொகுப்பு நன்கு படித்த ஓர் ஆசிரியரால் எழுதப்பட்டிருக்கிற அரைநிலை நாட்டார் பாடல்கள் என வரையறுக்க வேண்டியுள்ளது. இந்நூலின் ஆசிரியர் எம்மையெம் ஜெலீல் அக்கரைப்பற்றைச் சேர்ந்தவர். இயல்பாகவே அக்கரைப்பற்று மக்களுக்கு உள்ள சொல் வளத்தைக் கொண்டு தான் வாழுகின்ற சூழலிலுள்ள அத்தனை விடயங்களையும் அவதானமாகக் கொண்டு ஜெலீல் இந்தப் பாடல்களை ஆக்கி இருக்கிறார். இயல்பாகவே இறைதுதியோடு ஆரம்பிக்கிற நாட்டார் பாடல் வடிவம் ஒன்றினை ஜெலீல் இப்படி ஆரம்பிக்கிறார்:

பிஸ்மிலெண்டு நான் தொடங்கி
பேனயெடுத்தெழுத
தொட்ட பணி முடிக்க நீயும்
துணையிருப்பாய் யாறஹ்மான்.

அதே வடிவம், அதே இசை, அதே தொனியோடு வருகிற இப்பாடலில் பேனை என்ற சொல் மிக முக்கியமானது அந்தச் சொல்லாட்சியின் மூலமே இந்த நாட்டார் வடிவம் வேறுபடுகிறது. பேனை என்ற நவீன எழுதுகருவி ஒரு புறமிருக்க, பேனை பயன்படுத்தப்படுவதால் இங்கு அந்த நாட்டார் வடிவம் எழுதப்படுகிறது என்ற முடிவுக்கும் வரமுடிகிறது. மற்றும்படி இந்த ஆசிரியர் நன்கு கற்ற ஒருவர்என்பதும் தெளிவாகிறது. இதிலிருந்து அரைநிலை நாட்டார் வடிவத்திற்கும் மேம்பட்ட ஒரு நிலையினை இந்தப் பாடல்கள் எய்துவதனைக் காணமுடிகிறது.

இன்னொருபுறம் நாட்டார் சொல்லாட்சி, ஓசை, வடிவம் என்பனவற்றைக் கொண்டு நன்கு கற்றறிந்தவர்கள் நாட்டார் பாடல்களை

ஆக்கத் தொடங்கியுள்ளனர் என்ற முடிவுககு வரமுடிகிறது. அப்படியான பாடல்களை ஆக்கியவர்களுள் மிக முக்கியமான ஒருவராக அல்லது நாம் நன்கு தெரிந்தவர்களுள் ஒருவராக இந்நூலின் ஆசிரியர் ஜெலீல் அவர்களை இனங்காண முடியும்.

இந்நூலிலுள்ள இறைதுதி, தாய்க்கொரு தாலாட்டு, பிரியாவிடை, கலை பூத்த கருங்கொடி, அழிந்துபோன இயற்கை, தணியாத தாகம், இருட்டில் தொலைந்த நிலவு, பெற்றதால் பெற்ற பெருமை முதலான பாடல்கள் இயல்பாக செந்நெறி கவிதைகளில் வருகிற தலையங்கத்தை யொத்த பொருளையொத்த தன்மையில் வருகிறபோதும் அதன் உள்ளடக்க வடிவம் நட்டார் வடிவத்தை ஒத்ததாக அமைந்திருக்கிறது.

பாக்கிறது நிச்சயந்தான், மாசந்தேடிய மாம்பிஞ்சு, கறிக்கியெண்டா ஒதவுதில்ல மானமுள்ள ஈறல், சீனி போட்ட சிரிப்பு, கறையான் அரிக்காத கட்ட ,கிருப செவ்வாய் ஆண்டவனே, பனியில் பூத்த பந்தல், தண்ணீருக்கு வந்த தாகம், சேருறத நம்பயில்ல, பட்டணத்துத் தங்கம், வண்ண மயில் வாடாதே, கூலியெண்டா செப்பமென்ன, கடலுக்குப் போன உசிரு, அழ்ழா இரிக்கான், கடசிவெர வந்திராத, நூதனத்தார் நித்திரையாம் முதலான தலையங்கங்களில் அமைந்த பாடல்கள் தலையங்கம் உட்பட நாட்டார் வடிவத்தோடு இயைந்திருப்பதைக் காணமுடிகிறது.

பெரும்பாலும் இந்தப் பாடல்கள் அனைத்தும் ஏலவேயுள்ள நாட்டார் பாடல்களின் சொற்றொடரும் கருத்தும் இயைந்துபோலவே உள்ளது கவனிக்கத்தக்கது. இதற்குச் சிலவற்றை உதாரணமாகக் குறிப்பிட முடியும்.

சாமப் பொழுதுதாண்டி
சாவல் ஒழுப்பு முந்தி
தானொழும்பி சேவ செஞ்ச - என்ர
தாயே உனக்கென்ன வெல. (தாய்க்கொரு தாலாட்டு)
பட்ட மரமானேன் நானும்
பசியில்லாக் கல்லானேன்
செத்துச் சருகானேன் - என்ர
செறய இப்ப கண்டயளோ? (பாக்கிறது நிச்சயந்தான்)

வெந்த கிழங்கு போல
வெள்ளரிப் பிஞ்சி போல
இப்புடியே நீ இரிக்க - நான்
எப்படித்தான் தூங்கிறதோ.

மானுறங்கும் சோலயில
வண்டெரஞ்சி வந்ததது போல்
கண்டழுது வாறதென்ன - என்ன
காரணமோ கேளு புள்ள (மாசம் தேடிய மாம்பிஞ்சு)
ஓதிப் படிச்சவர்தான்
ஒழப்பெண்டா நல்லமில்ல
கல்பிச்சிருந்தா - புள்ள
கடசிவெர நல்லாரிக்கும். (மானமுள்ள ஈறல்)

இதேபோன்று பல பாடல்களைப் பார்க்க முடியும். சிலவேளைகளில் ஏலவே உள்ள நாட்டார் பாடல் வடிவங்களை மிஞ்சுகின்ற அளவில் இப்பாடல்கள் ஆக்கப்பட்டிருக்கின்றன. நாட்டார் பாடல் வடிவங்களுக்குரிய நகை, எள்ளல், காதல், பாலியல் சுவை, ததும்ப இப்பாடல்கள் அமைந்திருகின்றன. மேலும் பல பாடல்களில் சமூக விமர்சனம் அமைந்திருப்பதும் கவனிக்கத்தக்கதாக உள்ளது.

மொத்தத்தில் ஜெலீலின் 'தண்ணீருக்கு வந்த தாகம்' நாட்டார் பாடல்களின் தொகுப்பு நாட்டாரியலில் புதிய புதிய ஆய்வினை வேண்டிநிற்கிறது இந்த அணிந்துரை ஓர் ஆய்வுக் கட்டுரையாக அமையும் போது பல்வேறு செய்திகளைச் சொல்லக் கூடியதாக இருக்குமென நம்புகிறேன் ஜெலீலின் முயற்சிக்கு வாழ்த்துக்கள். இது போன்ற நூல்களை இன்னும் ஆக்க இறைவன் அவருக்குச் சித்திக்க வேண்டும். ஜெலீலுக்கு நமது வாழ்த்துக்களும் பிரார்த்தனைகளும்,

கலாநிதி றமீஸ் அப்துல்லா,
தலைவர், மொழித்துறை,
தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில்.

சிறப்புரை

மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய பிரதேசங்கள் வாய்மொழி இலக்கிய வளம் மிகுந்த பிரதேசங்களாகும். இப்பிரதேசங்களில் எழுத்து மரபு செல்வாக்குச் செலுத்தியபோது வாய்மொழிப் பாடல்களுக்கு நன்கு பரிச்சயமான இந்த மக்கள் அப்பாடல்களை அவ்வாறே தழுவி எழுத்திலே பாடல்களைக் கட்டுகின்ற ஒரு மரபைத் தோற்றுவித்தனர். குறிப்பாக அதிகம் எழுத்தறிவினைப் பெறாத கிராமியப் புலவர்கள் இத்தகைய பாடல்களை எழுதுகின்றனர். இவர்கள் தமது கிராமத்தில் நடக்கின்ற முக்கிய சம்பவங்கள், அனர்த்தங்கள், குடும்பப் பிரச்சினைகள், கொலை, களவு, கோயில் வரலாறு முதலியன பற்றி அதிகம் பாடல்களைக் கட்டுகின்றனர். இப்பாடல்கள் பாடப்படுவதற்காகவே எழுதப்படுகின்றன. இவற்றின் கையளிக்கை எழுத்துப் பிரதிகளாக மட்டுமன்றி வாய்மொழி யாகவும் இடம்பெறுகின்றன. இப்பாடல்கள் எழுத்திலே உருவாக்கப்பட்ட போதும் அடிப்படையில் வாய்மொழிப் பாடல்களாகவே உள்ளன. இவற்றை 'எழுத்துமரபுசார் வாய்மொழிப் பாடல்கள்' என்று கூறலாம்.

'எழுத்துமரபுசார் வாய்மொழிப் பாடல்' மரபிலே முக்கியமானதொரு பகுதியாக கவிகள் அமைந்துள்ளன. கவி என்பது கிழக்கிலங்கை முஸ்லிம்களின் கிராமியப் பாடல் வகைகளில் ஒன்றாகும். இவை ஈரடிக் கண்ணி அமைப்புடையவை. இவற்றில் அதிகமானவை காதல்'. திருமணம் சார்ந்தவையாகும். இக்கவிகள் பாவனை அடிப்படையில் காதலன், காதலி, தோழி, தாய் முதலியோருக்கிடையே இடம்பெறுகின்ற உரையாடல்களாக அமைக்கப்பட்டுள்ளன. அதேவேளை இவர்கள் மத்தியில் காதல் சாராத பொருளை உள்ளடக்கமாகக் கொண்ட கவிகளும் வழக்கில் உள்ளன. வாய்மொழியாக வழங்கிவந்த இக்கவிகளைச் சற்று எழுத்தறிவுள்ள கிராமியப் புலவர்கள் பின்பற்றிக் கவிகளை எழுதி மக்கள் மத்தியில் பாடுகின்ற மரபு கிழக்கிலங்கை முஸ்லிம்கள் மத்தியில் இன்றுவரை வழக்கில் உள்ளது. அம்பாறைப் பிரதேசத்தில் உள்ள சில முஸ்லிம் கிராமங்களில் இந்த மரபு அதிகமுண்டு.

எழுத்துமரபுசார் வாய்மொழிப் பாடல்களைத் திரட்டுவதற்காக அம்பாறைப் பிரதேசத்தில் கள ஆய்வினை மேற்கொண்டபோது அக்கரைப்பற்றுப் பிரதேசத்திலேயே கவிகளை எழுதி மக்கள் மத்தியில் அளிக்கை

செய்கின்ற வழக்கு மிக்க செல்வாக்குப் பெற்று விளங்கியதை அறிந்து கொண்டேன். பல முக்கிய கிராமியப் புலவர்களை இங்குதான் சந்தித்தேன். அப்போது கவிகளின் விளைநிலம் அக்கரைப்பற்றே என்பதைத் துணிந்துகொண்டேன். மு.இ.அஹமதுலெவ்வை, எம்.ஐ.எம்.ஜெலீல், ஏ.எல். மீராஉம்மா, சு.லெ. றசியா (இறக்காமம்) ஆகியோரை இதற்கு உதாரணமாகக் கூறலாம் இவர்களில் முன்னிருவரும் கல்லியறிவை அதிகம் பெற்றவர்கள். இவர்களை எனக்கு நண்பர் எம்.ஐ.எம், ஹனிபா (உதவிக் கல்விப் பணிப்பாளர்) அறிமுகப்படுத்தினார்.

அக்கரைப்பற்றின் கிராமிய இலக்கியப் பரப்பை வளப்படுத்துகின்ற இந்தக் கிராமியப் புலவர்களில் நண்பர் ஜெலீல் முக்கியமானவர். உடனுக்குடன் கவிகளைக் கட்டுவதில் அவர் வல்லவர். அத்துடன் அக்கவிகளை மிக்க இனிமையுடன் பாடுவதிலும் வல்லவர். இவை அனுபவம் முதிர்ந்த கிராமியப் புலவர்களுக்குள்ள முதன்மையான குணாம்சங்களாகும். கவியின் அடிப்படையான ஓசை நயம் கெடாது, ஆனால் ஒன்றுக்கு மேற்பட்ட இராக நுணுக்கங்களுடன் பாடவல்லவர். தனது கவிகளைப் பல்வேறு நிகழ்வுகளிலும் விழாக்களிலும் மக்கள் மத்தியில் இசைத்துக்காட்டிப் பாராட்டைப் பெற்றவர்.

வாய்மொழிக் கவிகளிலே மோனை அமைப்பே முக்கியம் பெற்றுள்ளது. எனினும் நான்கு வரிகளிலும் மோனை பெற்றுவருகின்ற தன்மை அவற்றில் இறுக்கமாகப் பின்பற்றப்படவில்லை. ஆனால் ஜெலீலின் கவிகளிலே நான்கு வரிகளிலும் மோனை பெறும் அமைப்பு இறுக்கமாகப் பின்பற்றப்பட்டுள்ளது. அதிலும் முதலிரண்டு வரிகளும் ஒரு வகையாகவும் ஏனைய இரு வரிகளும் மற்றொரு வகையாகவும் மோனை பெறும் அமைப்பு இறுக்கமாகப் பின்பற்றப்பட்டுள்ளது. இத்தன்மை அவரது கவிகளின் ஓசை இனிமையை ஏற்படுத்துவதாக உள்ளது.

அடுத்து அவரது கவிகளின் மற்றுமொரு முக்கிய அம்சம் பேச்சுவழக்குச் சொற்களை அவ்வாறே அதிகம் பயன்படுத்தியுள்ளமையாகும். கவிகளின் கூற்றுமுறைத் தன்மைக்கு இது வலுச் சேர்ப்பதாகும். அந்தவகையில் அவரது கவிகள் முஸ்லிம்களின் கிளைமொழித் தன்மையினை வெளிப்படுத்துவனவாகவும் அமைந்துள்ளன.

ஜெலீலின் கவிகளில் பொருள் அடிப்படையில் முக்கிய இரு போக்குகளைக் காணலாம். ஒன்று காதல் சார்ந்த வாய்மொழிக் கவிகளை அவ்வாறே பின்பற்றி எழுதப்பட்டுள்ளமையாகும். வாய்மொழிக் கவிகளைப் போல இவையும் மகிழ்வூட்டலை இலக்காகக் கொண்டவை யாகும். பாவனையான காதல் உணர்வுகளை வெளிப்படுத்துவதன் மூலம் சுவைஞருக்கு மகிழ்ச்சியை ஊட்டுவது இக்கவிகளின் நோக்கமாகும். காதல் உணர்வு, தோற்ற வர்ணனை, காதல் பிரிவு, பாலுறவு நாட்டம் முதலான விடயங்கள் மகிழ்வூட்டலுக்கான அம்சங்களாக இக்கவிகளில் இடம்பெறுகின்றன. சீனி போட்ட சிரிப்பு' என்ற தலைப்பில் அமைந்துள்ள கவிகள் எல்லாம் பெண் பற்றிய வர்ணனைகளாகவே அமைந்துள்ன. ஆனால் வாய்மொழிக் காதல் கவிகளில் பரவலாக இடம்பெறுகின்ற பாலியல் விரசத் தன்மை, பாலியல் சார் சொற் பயன்பாடு ஆகிய அம்சங்களை இவற்றிலே காணமுடியாது. ஏனெனில் இக்கவிகள் எல்லாம் மேடைப் பார்வையாளர்களுக்காகப் பாடப்பட்டவையாகும்.

வெதச்சிப் பழுத்து நல்ல வேளயில வெட்டிவெச்சி திண்டாத்தான் மச்சான் ஒங்குட தீரவொண்ணாப் பசியடங்கும்.

இக்கவியில் பாலியல் சார் கருத்து இடம்பெறினும் விரசம் இடம்பெற வில்லை. கவிகளுக்கு உரித்தான உள்ளுறைத் தன்மையை அமைத் துள்ளார். இந்த உள்ளுறைத் தன்மை கவியின் பொருளை ஆழப்படுத்து வதாகும். அதேவேளை இத்தகைய காதல் கவிகளின் ஊடாக சில சமூக விழுமியங்களையும் அவர் வெளிப்படுத்துகின்றார்.

ஜெலீலின் கவிகளின் மற்றொரு போக்கு சமகாலச் சம்பவங்களை... குறைபாடுகளைப் பொருளாக் கொண்டுள்ளமையாகும். இத்தகைய கவிகளிலே சமூக விமர்சனம் என்பது முக்கியமானதொரு விடயமாக உள்ளது. இத்தகைய கவிகளிலே ஜெலீலின் சமூக அக்கறையைக் காணமுடிகின்றது. இதற்குச் சிறந்ததொரு எடுத்துக்காட்டு 'அழிந்துபோன இயற்கை' என்ற தலைப்பில் இடம்பெறுகின்ற கவிகளாகும். தனது கிராமத்தின் இயற்கை மீது அவர் கொண்டுள்ள பற்றுறுதியை இக்கவிகள் வெளிப்படுத்தி நிற்கின்றன. குளத்தை மண்போட்டு நிரப்பி குடியிருப்பாக மாற்றுதல், மரம் வெட்டுதல், கடற்கரை மண் அகழ்வு, மலை உடைத்தல் முதலிய இயற்கை அழிப்புக்களால் ஏற்பட்ட தாக்கங்கள் பற்றிப்பாடுகின்றார்.

புறவ பச்சி யெல்லாமிஞ்ச பசி தீத்துப் போன கொளம்
பொலிவெழந்து போன... இந்த பொறிய இப்ப பார் சனங்காள்

என்று தனது ஊரிலே உள்ள ஒரு குளம் குடியிருப்பாகப் போனதை எண்ணி வேதனை அடைகின்றார். அவ்வாறே அண்மைக்காலங்களில் 'காவெட் பாதை' அமைப்பு என்ற பேரிலே வீதி ஓரங்களில் நிழல் தந்து நின்ற மரங்கள் அழிக்கப்பட்டதனால் ஏற்பட்ட தாக்கத்தையும் பாடுகின்றார்.

பாத செய்ய எண்டு செல்லி
பன தென்ன பால பலா
பல நூறு மரமெழந்தா பாலைவன மாகிறதான்

என்று அச்செயற்பாட்டினை மறைமுகமாக விமர்சனம் செய்கின்றார். இத்தகைய விடயங்கள் எழுத்து மரபு சார்ந்த இலக்கியவாளர்களின் கண்களுக்குப் படாதவையாகும். இறுதியில் இத்தகைய அழிப்புகளுக்குக் காரணமான மக்கள் மீது கடுமையான விமர்சனத்தை முன்வைக்கின்றார்.

கோழி முட்ட வித்து
கொறட்டக் கருவாடு வாங்கி
திண்ட சனம் இஞ்சரிக்கி - எப்ப திருந்துமடோ ஆண்டவனே

நல்லதுக்கும் கெட்டதுக்கும் வேறுபாடு தெரியாத அறியாமையை எண்ணி அவர் சலித்துக்கொள்கின்றார். 'வழக்கமுள்ள வாலாட்டிகள்' என்ற தலைப்பிலுள்ள கவிகள் ஆக்ரோசமான சமூக விமர்சனங்களாக உள்ளன. குறிப்பிட்ட ஒரு சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட இக்கவிகளில் அவரது கோபம் வெளிப்படுகின்றது. இதனால் சற்றுக் கடுமையான விமர்சனங்களாக அமைந்துள்ளன.

எனவே ஜெலீலின் கவிகள் கிழக்கிலங்கை முஸ்லிம்களின் தனித்துவமான தொரு இலக்கிய வகையான கவி மரபினை மேலும் வளப்படுத்துவன வாகும். அவரது கவிகள் மதிக்கப்பட வேண்டியன; பேணப்படவேண்டியன. அவரது இத்தொகுதி கவி மரபின் இன்னுமொரு பக்கத்தைச் சுட்டிநிற்கின்றது.

சின்னத்தம்பி சந்திரசேகரம்,
விரிவுரையாளர், மொழித்துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம்.

வாழ்த்துரை

எழுகவி பற்றி என் இதயத்தில் இருந்து.....

எழுகவி எம்.ஐ.எம் ஜெலீல் எனக்கு நன்கு தெரிந்தவர் இலக்கியத்தின் இனிய வடிவமான 'நாட்டார் பாடல்' என்பது நமது கிழக்கு மண்ணிற்கே உரித்தான முதுசமாகும். மட்டுமன்றி, இந்த மண்ணோடு இரண்டறக் கலந்துவிட்ட இந்த வாசத்தை, நேசத்தை பாசத்தோடு இவர் அனைவருடனும் பகிர்ந்து கொள்ள எடுத்த முயற்சி பாராட்டத்தக்கதாகும்.

மறைந்து கிடந்த எமது மண்ணின் மைத்தர்களின் சுவாசமான நாட்டார் பாடல்களைப், போட்டி போட்டுக் கொண்டு தேடிப் பொறித்து தெவிட்டாதின்பம் கண்டோர் பலர் எம்மத்தியில் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். சிலரோ... மறைந்தும் மறையாது மாண்புற வாழ்ந்து கொண்டுமிருக்கின்றனர்.

இன்னும் சிலரோ, நாட்டார் பாடல்களின் பல்வேறு வடிவங்களையும் படித்துணர்ந்து..... பார்த்தும்.....கேட்டும் ரசித்தும் இன்னுமின்னமாய்... தெடிச் சேகரித்தும் வருகின்றமையைக் காணக்கூடியதாகவும் இருக்கின்றது.

எனினும், இந்த எழுகவி எம்.ஐ.எம் ஜெலீல் அடுத்த வகையினராக இருக்கின்றார். அதாவது, எமது முன்னோர்களின் முகவரிகளைத் தேடிக் கொண்டிராது தனது மிகுந்த கற்பனை வளத்தினைப் பயன்படுத்தி கருத்துச் செறிவோடு நாட்டார் பாடலென்ற நயமிக்க நளினம் மிகக் கொண்ட நாட்டின் வழக்கத்திலிருந்த சொற்களின் ஆழம் அறிந்து அதற்கு இயைந்து கொடுத்து...., தனித்துவமான நாட்டார் பாடல்களையே... உருவாக்கி உலாவர முயன்றிருப்பது மெச்சத்தக்கதாகும். பல்வேறு சந்தர்ப்பங்களில்... பல்வேறு இடங்களில், பல்வேறுபட்டவர்கள் முன்னிலையில் பாடி கைதட்டல்களையும், போட்டிகளில் கலந்து புகழ்மாலைகளையும் தோள்களில் வாங்கிய ஜெலீல், இந்தப்பாடல்களை யாத்து, பக்குவமாய்

படித்து உணரும் மக்கள் அனைவரினதும் மனங்களில் நிறைந்து குடி கொள்வார் என்பது எனது நம்பிக்கை.

புதிய மொழிநடையிலும், சொல்லாக்கத்திலும், வரிவடிவங்களிலும் வண்ணம் காட்டி நிற்கும் இந்த நாட்டார் பாடல்கள்..... நாம் அனைவரும் படிக்க வேண்டிய அற்புதமான பொக்கிஷமாகும்.

எமது பண்பாட்டுக் கோலங்கள்.... பழுது படாது...., கலாசார மாண்புகள் கடுகளவும் மறைந்து போய்விடாது.... பாதுகாக்கும் பாதுகாவலர் பட்டியலில் எம்.ஐ.எம் ஜெலீலும் சேர்ந்திருக்கின்றார்... என்பது இனிப்பான தகவலாகும்.

ஒவ்வொரு பாடலும், தலைப்பிற்கேற்ப மிகவும் சிறப்புடையதாக இருப்பது மட்டுமன்றி... இதயத்தை ஈர்க்கும் வகையிலும் அமைந்துள்ளமை அருமை! அருமை!! எதிர்கால சந்ததிக்கு இந்தப் பாடல்கள் ஜெலீலை இனங்காட்டி.... சிறந்த இடத்தை நிச்சயம் பெற்றுக் கொடுக்கும் என்பது எனது நம்பிக்கை..... நல்வாழ்த்துக்கள்.

எம்.ஐ.எம் அமீர்
அழகியற்கலை -
உடற்கல்வி விரிவுரையாளர்.
தேசியக்கல்விக் கல்லூரி
அட்டாளைச்சேனை.

ஆசிரியரிடமிருந்து...

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர்ரஹீம்.
அனைத்தையும் ஆளுகின்ற அழ்ழாவுக்கே புகழனைத்தும் அல்ஹம்துலில்லாஹ்.

என் "தாய்க்கொருதாலாட்டில்" தொடங்கி "வாசலுக்குவாறதெப்ப" என்கிற நாட்டார்பாடல்கள் அனைத்தும் சுமார் முப்பது ஆண்டுகளாக என்னால் எழுதப்பட்டும், பாடப்பட்டும் வந்தவைகளுள் சில என்னையும் இனம் கண்ட ஒரு சிலர் இந்நாட்டார்பாடல்களின் தேவைபற்றியும் இவை பாதுகாக்கப்படவேண்டியதன் அவசியம் பற்றியும் எடுத்துரைத்தனர். அவர்களில் அக்கரைப்பற்று வலய உதவிக் கல்விப்பணிப்பாளர். ஜனாப் எம்.ஐ.எம். ஹனீபா அவர்கள் மிகுந்த ஆர்வமூட்டியதை என்னால் மறைக்கமுடியாது, அதேபோல களம் தந்து நான் பாடக்கேட்டு ரசித்துக் கொண்டிருப்பது மட்டுமல்லாமல் காலத்தின் தேவையறிந்து புத்தகமாய் வெளியீடு செய்வதற்கு அனைத்துமான பணியை சிரமேற்கொண்டு செய்துமுடித்த அம்பாரை மாவட்ட கலாசார ஒழுங்கிணைப்பு உத்தியோகத்தரும், எனது நண்பருமான, ஜனாப். A.L தௌபீக் அவர்களுக்கும், மற்றும் அட்டாளைச்சேனை மத்திய கல்லூரி பிரதி அதிபர் AL. அன்வர் அவர்களுக்கும் எனது முதல் நன்றிகளை காணிக்கையாக்குகிறேன்.

முஸ்லிம் பாரம்பரிய கலைகளில் நாட்டார்பாடல் சிறந்த இடத்தை வகிக்கிறது. மரபுவழி வாய்மொழிப் பாடலான இவை கவி என அழைக்கப்படுவதுமுண்டு பாடசாலை முதல் பல்கலைக்கழகம்வரை வியாபித்து இலக்கியத்தில் நிலையான அந்தஸ்தைப் பெற்றுள்ள நாட்டார் பாடல் பல மெட்டுக்களில் பாடப்படுவதும், பலபாடல்களும் ஒரே மெட்டில் பாடக்கூடியதும் இந் நாட்டார் பாடல்களின் சிறப்பியல்புகளில் ஒன்றாகும்.

நாட்டார் பாடல்களின் செழுமை பற்றியதான விளக்கங்களுடன் பதிப்புரை முதல் வாழ்த்துரை வரை வழங்கிய அனைவர்களினதுமான

தரவுகளை விட இத்தொகுப்பு பற்றி நான் எழுதுவதற்குத் தேவை இருப்பதாக தெரியவில்லை.

தனது விலைமதிப்பற்ற நேரங்களை விரயமாக்கி இந்த "தண்ணீருக்கு வந்த தாகம்" புத்தகத்திற்கு அணிகலனாய் உரை தந்த அவர்களுக்கு என் அடிமனதின் நன்றிகள் உரித்தாகட்டும். நாட்டார் பாடல் எனும்கலை வாழவேண்டுமானால் தொடர்ந்து அதனைக் கொண்டுசெல்ல வேண்டும் என்பதுவே எனது அவா! அதற்கு என்னாலான இச்சிறுபணியானது மிகுந்த சிரமங்களைச் சந்தித்தே சாத்தியமாகியது. இதனை மாணவர்கள் படித்துப்பயன்பெறவும் எதிர்கால சந்ததிகளுக்கு எடுத்துச் செல்லுவதுமே என்னுள் ஊறிக்கிடந்த இலட்சியமாகும்.

இதற்காக கரம்தந்து உதவிய கிழக்குமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திரு. டி. டபிள்யு. யு வெலிக்கல அவர்களுக்கும் திணைக்கள கலாசார உத்தியோகத்தர் திரு. கே அன்பழகன் அவர்கள் மற்றும் திணைக்கள அதிகாரிகள், அலுவலர்கள் மற்றும் அனைவருக்கும் எனது விஷேட நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும், இம்மலரின் அட்டைப்படம் உட்பட மிகவும் அழகுற கணனி வடிவமைப்புச் செய்துதவிய ஜனாபா பழீலா குத்தூஸ் (எப்கே.கொம்) அவர்களுக்கும், இந்நூலினை அச்சிட்ட சிற்றிபொயின்ற் அச்சகத்தாருக்கும் எனது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்தக் கொள்கின்றேன்.

பல தலைப்புக்களிலுள்ள இப்பாடல்கள் உள்ளங்களுக்கு மருந்தாகவும். உணர்வுகளுக்கு விருந்தாகவும் உங்களை மகிழ்விக்கும் என்கின்ற எதிர்பார்ப்புக்களோடு.....

'எழுகவி'
எம்.ஐ.எம் ஜெலீல்.
ஒக்டோபர். 2013

உள்ளிருப்பவை...

இறைத்துதி	25
தாய்க்கொரு தாலாட்டு	26
பாக்கிறது நிச்சயந்தான்	29
மாசம் தேடிய மாம்பிஞ்சு	32
கறிக்கியெண்டா ஒதவுதில்ல	35
மானமுள்ள ஈறல்	38
சீனி போட்ட சிரிப்பு	41
கறையான் அரிக்காத கட்ட	45
கிருப செய்வாய் ஆண்டவனே!	48
பனியில் பூத்த பந்தல்	51
தண்ணீருக்கு வந்த தாகம்	54
பட்டணத்துத் தங்கம்	57
சேருறத நம்பயில்ல	59
பிரியா விடை	62
கலைபூத்த கருங்கொடி	65
அழிந்து போன இயற்கை	68

தணியாததாகம்	71
வண்ணமயில் வாடாதே	74
கூலியெண்டா செப்பமென்ன	77
கடலுக்குப் போன உசிரு	80
இருட்டில் தொலைந்த நிலவு	84
அழ்ழா இரிக்கான்	88
பெற்றதால் பெற்ற பெருமை	91
கடசிவெர வந்திராத	94
நூதனத்தார் நித்திரயாம்	98
வழக்கமுள்ள வாலாட்டிகள்	101
வாசலுக்கு வாறதெப்ப	104

இறைத்துதி

பிஸ்மி லெண்டு நான் தொடங்கி
பேன யெடுத்தெழுத
தொட்ட பணி முடிக்க நீயும்
துணையிருப்பாய் யாறஹ்மான்

அகிலம் படச்சி வெச்சி
ஆளுகிற நாயனிடம்
கேட்டுத் தவிச்சேன் நெக்கிக்
கெடச்சதிந்தக் கவிமழதான்.

நாவில் சுரம் கொடுத்தான்
நல்லறிவில் ரசமடச்சான்
கல்பில் கலையுடுத்தான் என்னக்
கவி மழையில் ஊறவெச்சான்

கற்ற கடுகேத்தி நானும்
கடல் வழியில் போயிரிக்கேன்
கலங்கரையக் காட்டி என்னக்
கரயேத்திக் கார் றஹ்மான்

உட்ட பொழயிருந்தா ஆரும்
ஊர் காதில் போட்டுரொண்ணா
கிட்ட வந்து செல்ல நீயும்
கிருப செய்ரா ஆண்டவனே!..

தாய்கொரு தாலாட்டு

கேட்டால் வரம் கொடுக்கும்
கிருபயுள்ள யாறஹ்மான்
போட்ட பிச்ச உம்மா ஒங்குட
பொன் வகுத்தில் நான் தரிச்ச.

கருவில் உதிச்ச என்னக்
கண் இம போல் காப்பாத்தி
தளிராகப் பெத்தெடுத்த என்ர
தங்கமது என்ன வெல.

உலகத்தில் நான் பொறக்க
உத்தமியாத்தான் செமந்து
பட்ட துயரென்ன உம்மா அந்த
பாசமது என்ன வெல.

கட்டிலில்ல மெத்தயில்ல
களி மண்ணுத் தின்னயில
படுக்க எணக்கமில்ல - உம்மா
பட்டபாட்டுக் கென்ன வெல

சாமப் பொழுதுதாண்டி
சாவல் ஒழுப்பு முந்தி
தானொழும்பி சேவ செஞ்ச - என்ர
தாயே உனக்கென்ன வெல

நெறமாசம் வகுத்திலதான்
நெல்லவிச்சிக் காய வெச்சி
குத்திப் பொடச்சி வெச்ச அந்த
கொணமது தான் என்ன வெல

பாயும் எழெச்சி உம்மா
பவுத்திரமா கொள்ளி கொத்தி
அடுப்பினில தண்ணி வெச்ச அந்த
அணிவிடக்கி என்ன வெல

தேனோட ஈச்சம் பழம்
தேவயெண்டு தானறிஞ்சி
சீரகமும் சேத்து வெச்ச இந்த
செய்மதிக்கு என்ன வெல

பத்து மாசம் வகுத்தில்
படாத பாடு நான் படுத்த
அழுது தொழுது கேட்ட அந்த
ஆறுதலுக் கென்ன வெல

பத்து மாசம் செமந்து
பகலிரவாக் காத்திருந்து
பெத்தெடுத்தா உம்மா இந்த
பெரும்பணிக்கு என்ன வெல

பொறக்கும் நொடியில் நானும்
பொறுமை எழெந்தொதெச்ச
வலிமறந்து வாழ்வளிச்ச அந்த
வலிமயது என்ன வெல

காத்துநோவு பட்டு நானும்
கதறியழும் நேர மெல்லாம்
கட்டி மோந்த அந்தக்
கரிசெனக்கி என்ன வெல

வைத்தியமும் கைவிரிக்க
வல்லகமும் காலியுற
தோளில் செமந்தழுத அந்த
சோகமது என்ன வெல

உசிரில் உசிராம் ஒங்குட
உதிரமதப் பாலாக்கி
நெஞ்சோடணச்சித் தந்த
நிம்மதிக்கு என்ன வெல

மொட்டாய் மலந்த என்னப்
பட்டால் அலங்கரிச்சி
உச்சி மோந்த அந்தரங்க
ஒறவதுதான் என்ன வெல

உள்ளத்துச் சொர்க்கம் என்ர
உம்மாவின் பாசமது
வெண்ணயோட தாளி இது
வெல மதிப்பு இன்னமில்ல.

முஸ்லிம் முரசு -
22. 05. 2013

பாக்கிறது நிச்சயந்தான்

அஞ்சி வருசம் நானும்
அரபு மண்ணில் குடியிருந்து
வந்தேன் உன்னப் பாப்பமெண்டு
வலபோட்டும் கெடக்கயில்ல. ஆண்

ஓவெண்டழுது மச்சான்
ஒப்பாரி வெக்கணும் போல்
இரிக்குதுகா நெக்கி - இந்த
எடமுமெண்டா செப்பமில்ல! பெண்

நானும் அழுது மச்சி
நாவெல்லாம் தான் வரண்டு
பூவும் சுருங்கி இப்ப
புன்னகையும் பூக்குதில்ல! ஆண்

பட்ட மரமானேன் நானும்
பசியில்லாக் கல்லானேன்
செத்துச் சருகானேன் - என்ர
செறய இப்ப கண்டயளோ? பெண்

கறக்காத பாலருந்தி
காய்க்காத பழமுமுண்டு
மேகத்தில் படுத்துறங்க
மெய்யாக் கனவு கண்டேன். ஆண்

நெலமும் குளுந்து மச்சான்
நெஞ்சமெல்லாம் பூப்பூத்து
அருளும் சொரிஞ்சி அழ்ழாஹ்
ஆயிசோட வெச்சிரட்டும் பெண்

ஆழிக்கடலில் மச்சி
அலை குறஞ்சி போனது போல்
பொலிவிழந்து போன இந்தப்
பொறிக்கி என்ன காரணமோ? ஆண்

உச்சி வெயிலும் மச்சான்
ஊராரின் செல் பேச்சும்
காலத்துச் சோதனையும் - என்ன
கக்கிசமும் கண்டயளோ? பெண்

ஈச்சம் பழமிரிக்கி
இனிப்புகளும் கூடரிக்கி
ஊட்ட மனசிரிக்கி - ஒண்ட
ஊட்ட வெர நாட்டமில்ல. ஆண்

கள்ளூறும் பூவு ஒண்டு
காத்துக் கெடக்கிறென்ன
எள்ளெடுத்து வாற வண்டு
எப்ப வந்து சேருறதோ. பெண்

பொழியும் நெலவு கண்டா
பொறுக்குதில்ல ஒன் நெனப்பு
ஈட்டி முன போல - என்ர
ஈரலில குத்துறென்ன. ஆண்

காத்தில் இசையாவேன்
காதெல்லாம் தேனாவேன்
ஏட்டில் எழுத்தாவேன் - என்ன
ஏற்கிறது நிச்சயமோ ..... பெண்

கூட்டில் கிளியானாய்
குளவியுள்ள புத்தானாய்
காட்டில் மலரானாய் - ஒன்னக்
கண் குளிரக் காணுறெப்போ. ஆண்

நல்ல மழ பேஞ்சி
நடுச்சாமம் வெயிலெறிச்சி
பகலில் நெலவுழுந்தா - என்ன
பாக்கிறது நிச்சயந்தான் பெண்

- முஸ்லிம் முரசு -
29.05.2013

மாசம் தேடிய மாம்பிஞ்சி

காலயில வந்த காகம்
கதறி அழுததென்ன
என்ன வெண்டு கேட்டயளா? நீங்க
என்ன சென்னா என் மதினி ஆண்

மம்முறாயின் காக்காவொண்டி
மாசமா இரிக்கிறாவாம்
மாம் பிஞ்சி தேடி - அவ
மாரடிச்சித் திரியிறாவாம் பெண்

தையில் மழ பேஞ்சதில
தாமதமாய் பூத்திரிக்கி
மாமரமும் காச்சி - இவ
மகிழுறது எப்பயாங்கா? ஆண்

காலமில்லாக் காலம் அவ
கறடி பொறக் கண்டது போல்
கற்பந்தரிச்சிக்கா - என்ன
கைங்கரியம் செய்யிறதோ பெண்

பசுப்பாலக் காச்செடுத்து
பக்குவமா ஆற வெச்சி
குங்குமப்பூ போட்டு - அத
குடிச்சிரத்தான் செல்லிருகா. ஆண்

தாயின் கருவறயில்
தானிரிக்கும் வேளயில
செங்கரும்பு கேட்டு - வாப்பா
சீவிக் குடுத்ததாங்கா. பெண்

ஈரச்சிரிப்பும் ஒங்குட
எரக்கமுள்ள தேன் பேச்சும்
இனிச்சி வடியிறது - புள்ள
இப்பதானே வெளங்கிறது. ஆண்

இனிச்சி வடிஞ்சதில நல்லா
ஏண்ட மட்டும் தாண்டயளே
தள்ளி இப்ப போய்ப் படுத்து - நீங்க
தனியருந்து காயவெய்ங்கோ. பெண்

வெந்த கெழங்கு போல
வெள்ளரிப் பிஞ்சி போல
இப்புடியே நீ இரிக்க - நான்
எப்புடித்தான் தூங்கிறதோ ஆண்

தாலி கட்ட முன்ன நீங்க
தனியப் படுத்தயளே
நெனவிலத வெச்சி - இப்ப
நிம்மதியாப் போய்ப்படுங்கோ பெண்

மானுறங்கும் சோலயில
வண்டெரஞ்சி வந்தது போல்
கண்டழுது வாறதென்ன - என்ன
காரணமோ கேளு புள்ள. ஆண்

வாப்பா அடிச்சாரோ இல்ல
வண்டேதும் குத்தினதோ
அந்தரத்தில் நிண்டழுகாய் - என்ன
ஆனதெண்டு செல்லியழு பெண்

நானும் தொடயுமில்ல
நாவாலும் ஏசிரல்ல
தானாய் அழுகிறாண்டி - அவன்
தம்பி ஒண்டு வேணுமெண்டு. ஆண்

பிரதேச சாஹித்திய விழா 2008 (பரிசு பெற்றது)

கறிக்கி எண்டா ஒதவுதில்ல

வாசலில நிக்குமந்த
வளந்த கொடிப்பழத்த
கண்டதுல ஊறுதிஞ்ச - என்ர
கண்படுமோ நானறியேன். ஆண்

திங்கள் ஒளிவில் எங்கிட
தின்னயில பூப்பூத்து
காச்சிப் பழுத்திரிக்கி - நீங்க
கண்ணதுல வெச்சிரொண்ணா. பெண்

பஞ்சமுள்ள நேரம் இதப்
படச்சிரிக்கான் ஆண்டவனும்
இடயும் சிறுத்து - இப்ப
எட கொறஞ்சி இரிக்கிறென்ன. ஆண்

அள்ளி வெச்ச மண்ணதுக்கு
அளவாகத் தானிரிக்கி
கண்ணில் கொறயிரிக்கி - நீங்க
கட்டாயம் பாத்துருங்கோ. பெண்

தொட்டால் இனிக்கும் இது
தூர நிண்டாலும் மணக்கும்
பாத்தால் வெடிக்கும் - இந்தப்
பண்பு என்னதான் பொருத்தம். ஆண்

காகிதத்த மையும் அது
காணாமக் கண்டது போல்
உள்ளதொரு பழத்த - நீங்க
ஊந்துயிப்ப பாக்கிறென்ன! பெண்

பூத்துக் குலுங்கும் ஒங்குட
புன்னகையோ என்ன வெல
காத்துக் கெடக்கும் - என்ர
கனவ இப்ப என்ன செய்ய? ஆண்

காத்துக் கெடந்து நல்ல
கண்டு வெச்சி வேர் புடிச்சி
பூக்குமட்டும் பாத்திருந்தா - அந்தப்
பூ மலந்து சென்ன வெல பெண்

பட்டுத் தெறிக்கும் அந்த
பவள ஒளி மின்னலப்போல்
கண்ணப் பறிக்கும் - இந்தக்
கன்னமது என்ன வெல ஆண்

தாழயில பூவெடுத்து கட்டித்
தங்கமதில் நாரெடுத்து
செஞ்சதிந்தக் கன்னம் - இது
சில்லறயா விக்கிறெல்ல பெண்

ஏழு கடல் ஊத்தே என்ர
இன்பக்கனியமுதே
தாழம் விழுதே - அந்தத்
தரிசு நெலம் என்ன வெல ஆண்

தங்கம் வெளயும் நல்ல
தாமரையும் மொட்டவிழும்
காந்தம் வெளயும் - இதக்
கண்ட வெல விக்கிறெல்ல பெண்

மேக மலச் சாரலுக்கும்
மேல் முகட்டுத் தேன் வதைக்கும்
மொட்டவிழ்ந்த தாமரக்கிம் - இப்ப
மொத்தமாக என்ன வெல ஆண்

நேத்தி வெச்சிக் காத்திருந்து
நெறஞ்ச தவமிருந்து
சேத்து வெச்ச சொத்து - இது
சின்னவெல விக்கிறெல்ல பெண்

வீச்சி வாள் போல இது
வெண் பொடலங்காய்போல
காச்சாத தங்கம் - இது
கறிக்கி எண்டா ஒதவுதில்ல ஆண்

(தேசிய வாசிப்பு மாதம் 2012 - அட்டாளைச்சேனை
(பரிசு பெற்றது)

மானமுள்ள சுறல்

புள்ளயும் கொமராகி
பொழுதால சாயிறென்ன
இப்பிடியே நாமருந்தா - இனி
எப்ப கர சேக்கிறதோ தாய்

நானுந்தான் பாக்கன் ஒண்டும்
நல்லா அணயிதில்ல
அழ்ழா இரிக்கான் - நானும்
அவன நம்பித்தானிரிக்கன். தந்தை

எளய தம்பிக் காக்காட
எளய மகன் ஒண்டிரிக்கி
நல்லா ஒழக்கிறானாம் - அத
நாம அப்ப பாக்கிறதா. தாய்

சூதும் வெளயாடி
சுதந்திரமாப் பொண்புடிச்சி
தண்ணி அடிச்சி - தம்பி
தாறுமாறாத் தரியிறாண்டி. தந்தை

காசிரிக்கி எண்டு அந்தக்
காடயனப் பண்ணுறத
கறடி வாற கடப்பலில - நான்
கட்டி வெப்பன் என்கொமர. தாய்

மூசினார் மச்சான்ர
மூத்த மகன் முத்தலிவு
வட்டமிடுகிறாராம் - ஒண்ட
வண்ணமயில் என்ன சென்னா தந்தை

வாப்பா விரும்பினாத்தான்
வாழுறெண்டு செல்லிரிக்கா
ஒத்து வெருமெண்டா - நாம
ஓர நிக்கத் தேவயில்ல. தாய்

ஓதிப் படிச்சவர்தான்
ஒழப் பெண்டா நல்லமில்ல
கல்பிச்சிருந்தா - புள்ள
கடசிவெர நல்லாரிக்கும். தந்தை

ஊட்டோட எல்லாரும்
ஒங்களோடத்தான் விருப்பம்
ஒழப்பு செரியில்ல எண்டு - நீங்க
ஒண்ணாண்டு செல்வயளோ ! மகள்

கலியாணம் பண்ணுறெண்டா
கையிலயும் ஒண்டுமில்ல
மகரும் தர வேணும் - ஒண்ட
மனங்குளிர என்ன செய்வேன். மாப்பிள்ளை

பூமிரிக்கி காசிரிக்கி
போக வெர வண்டிரிக்கி
கேட்டாத் தருவார் - வாப்பா
கேக்க நீங்க சம்மதமா? மகள்

சீதனமெண்டா உம்மா
சீ... யெண்டு செல்லிரிக்கா
வேர்வ சிந்தித்தானொழச்சி - நானும்
வெல்லு மட்டும் இரிப்பயளா? மாப்பிள்ளை

கை வளையல் மோதிரமோ!
கனமான அட்டியலோ!
தேவயில்ல மச்சான் - நீங்க
தேடி மட்டும் சொணங்கிரொண்ணா! மகள்

உள்ளதெல்லாம் பேசி நாம
ஒத்துமயாத் தானிருந்து
வாழத் துடிக்கோம் - அந்த
வல்ல றஹ்மான் தெருவான். மாப்பிள்ளை

கேட்டுப் பொறக்குறெல்ல - நாம
கேளாமக் கெடக்கி றெல்ல
ஏடும் எழுது றெல்ல - விதி
எழுதி வெச்ச அவனிரிக்கான். மகள்

(பிரதேச கலாசார விழா 2010 (பரிசு பெற்றது)

சீனி போட்ட சிரிப்பு

படிச்ச பொண்ணு வேணுமெண்டு
பதினாலு பொண்பாத்து
கண்டெடுத்த பொண்ணு - அது
கைக்கடக்கமானது தான்.

பதிமூணாம் நெலவு போல
பளபளண்டு மின்னுதுகா
தம்பிக்கு ஏத்த புள்ள - அவள்
தளதளண்டு தானிரிக்காள்.

கடுகு போல மச்சமொண்டு
கன்னமதில் தானிரிக்கி
எடுப்பெண்டா ஏதுமில்ல - அவள்
ஏழ பெத்த புள்ளெலவா.

சில வடிச்ச சித்திரம் போல்
செவ்வாழக் குலையது போல்
தலமுடிச்சி நிண்டா - அவள்
தங்க ரதம் போலரிப்பாள்.

வத்தப் பழக் களறும்
வடிவெண்டா செப்பமென்ன
வெள்ளி வாள் போல - அவள்
வேகமென்ன பாரு தம்பி.

ஆமணக்கம் கொட்ட போல
அழகான கண்ணிரெண்டும்
முந்திரி போல் மூக்கும் - அவள்
மொகமுமெண்டா என்னழகு

பச்சரிசிப் பல்லழகும்
பவள மல்லி உதடழகும்
இஞ்சி இடுப்பழகும் - அவள்
ஏத்தமுள்ள பொம்புளதான்

நெஞ்சியெண்டாப் பிஞ்சியது
நெறகொறஞ்ச வஞ்சியது
கெண்ட சிறுத்து - அவள்
கிழிச்ச தாழ போலரிக்காள்.

சிரிச்சாலும் தேயிலக்கி
சீனி ஒண்டும் தேவயில்ல
பாத்திருந்தா நாள் முழுக்க - நொக்கு
பசி ஒடுங்கும் பாருதம்பி.

பத்தாம் வகுப்பும் நல்ல
பண்புறவும் பக்குவமும்
பாசமுறும் நேசம் - அவள்
படிச்சிரிக்காள் பாருதம்பி.

கையில் வளையலில்ல
கழுத்திலயும் மாலயில்ல
காதிலொரு தோடுமில்ல - ஆனா
காச்சாத தங்கமடா.

கோட மழ பேஞ்சி
கொத்தவர பூத்தது போல்
பாத்தால் மறக்க வொண்ணா - அவள்
பவ்வியமாத்தானிரிக்காள்

படுத்தொழும்பி கெணத்தடிய
பல்வெளக்கு முன்னால
பாக்கக் கெடக்க மாட்டா - நீ
பகுத்திரமா பாரு தம்பி

குளிச்சி முடிச்சியவள்
கொண்ட துடக்க முன்ன
ஒளிச்சிருந்து பாத்தா - நீயும்
உண்மையெல்லாம் தான் துலங்கும்

ஆஞ்சாறு றூமுமில்ல
அத்திவாரங் கூடயில்ல
ஆம்புளயும் ஆருமில்ல - அவள்
அழகு மட்டும் சீதனந்தான்

கட்டிலும் தானுறங்கும்
கதவுகளும் ஆழ்ந்துறங்கும்
கண்ணவளக் கண்டா - எந்தக்
கனவுகளுந் தானுறங்கா

களனி பல்கலைக்கழக மாணவர்களின்
கலை கலாசார ஆய்வு - 2012

கறையான் அரிக்காத கட்டை

மாப்புள்ள ஒண்டிரிக்கி
மகனோட படிச்சவராம்
புடிச்சிருந்தாப் பாத்து - நாம
பொருந்துமெண்டா பேசிருவம்.

படிச்சரிக்கார் புள்ள அவர்
பாக்க கேக்க நல்லாரிக்கார்
சொந்தத் தொழில் செய்றார் - அவர்
சோக்கான புள்ள தாங்கா.

பாட்டாளி பெத்த புள்ள
பணிவிடக்கி சோம்பலில்ல
கூட்டாளி கூடயில்ல - ஒரு
குடிப்பழக்கம் ஏதுமில்ல.

தாய மதிச்சி அவர்
தகப்பன் வழி தான் நடக்கும்
பாததெரிஞ்சவர்தான் - நல்ல
பவுத்திரமாத் தானிரிக்கார்.

மட்டு மரியாதயோட
மானம் தெரிஞ்சவர்தான்
கெட்டகுணம் ஒண்டுமில்ல - நல்ல
கேலியாகப் பேசுவாராம்.

தாய்புள்ள எண்டு அவர்
தங்கமாகத்தான் பழக
ஏத்த குணமுள்ள புள்ள - எங்கும்
ஏறெழுத்தும் பாக்குறெல்ல

சாதிசனமெண்டா அவர்
சகலதுந்தான் செஞ்சிருவார்
நோய் நொடிகளெண்டா அங்க
நூறு தரம் போய் வெருவார்

வட்ட வடிவான முகம்
வாட்ட சாட்டமானவர்தான்
ஆறடியும் தானிரிக்கும் - நொக்கு
ஆச வெரும் பாத்தயெண்டா

பாசாங்குமில்ல அவர்
பண்ணெறக் கேடுமில்ல
பொய்களவுமில்ல - நல்ல
புத்தியுள்ள புள்ளதானாம்

நக்கல் நசும்பலில்ல
நக்குவாரப்புத்தி யில்ல
தெப்பிராட்டியந் தெரியா - நல்ல
சீதவியாம் பாத்தயளோ

கூட்டிக் குடுக்குறெல்ல
குழி தோண்டும் பழக்கமில்ல
மாட்டி வெக்கிறெல்ல - நல்ல
மனம் நெறஞ்ச புள்ள அவர்

கோப தாபம் ஏதுமில்ல
கொஞ்சிப் பழகுவாராம்
கெஞ்சிப் பழக்கமில்லா - நல்ல
கெட்டியான ஆம்புளதான்

நல்ல நெலம் தேடி
நாளிகையும் தான் பாத்து
போட்டவெத புள்ள - அழ்ழா
பொருந்து மெண்டாத்தான் தெருவான்

"HEO வின் கலைவிழா" *2011*

கிருப செய்வாய் ஆண்டவனே!

அல்ஹம்து எண்டோதி
ஆமினெண்டு கையேந்தி
கேக்கும் துஆவில் - நீயும்
கிருப செய்ரா ஆண்டவனே.

தோப்பில் தனி மரமாய்
தூர நிண்டு நானழுது
கண்ணும் செவந்திரிக்கி - என்ர
கவலயின்னம் மாறுதில்ல.

நானும் முடிச்சியிப்ப
நாலஞ்சி வருசமென்ன
வகுத்திலொரு புள்ளயில்ல - சனம்
வழிநெடுக ஏசுறென்ன.

கல்லும் உரிகிரிக்கும்
கவலயெல்லாம் கேட்டிருந்தா
துள்ளிவெரப்புள்ளயில்ல - எண்டு
தூத்துறதப் பார் றஹ்மான்.

வேலருந்து வாறவெர
வீட்டில் எணப்பாத்தி
தண்ணிகுடுக்க - ஒரு
தங்க மொண்ட தா றஹமான்.

ஆளாள் மொகம் பாத்து
அழுது வடிக்கிறத
பாத்திரிக்காய் றப்பு - ஒன்ட
பாச மழ பேயிறெப்ப.

சாமத்தில் நான் தொழுது
சங்கதியச் செல்லிருந்தும்
பாலன் கெடக்க - ஒரு
பாக்கியந்தான் இன்னமில்ல.

ஒழுங்க முழுக்க வந்து
ஓடி வெளயாடுதுகள்
கடப்பலுக்குப் போனா - அதக்
காணமனம் தாங்குதில்ல.

உசிருக்குசிர் குடுப்பேன்
ஒம்பது நாள் நோம்பிரிப்பேன்
கற்பந் தரிச்சு தெண்டா - ராக்
கண் முளிச்சி நான் தொழுவேன்.

இருளும் வெலகி என்ர
இரைஞலெல்லாம் கை கூடி
மனசும் நெறஞ்சி - அழ்ழா
மகிழச்சியோட வெச்சிரொணும்.

காட்டில் மழையுழுந்து
கனி மரங்கள் காச்சதுபோல்
என்ர வகுத்தில் ஒளியெலங்கி
என்ன வாழவெச்சி கார்றஹ்மான்.

ஏழ தொழுது நாளும்
எண்ட மட்டும் தானிரங்கி
கேட்ட வரம் கெடக்க - நீயும்
கிருப செய்வாய் ஆண்டவனே.

இலக்கிய விழா 2012

பனியில் பூத்த பந்தல்

ஆராரோ ஆரிரரோ
ஆரிரரோ ஆராரோ
ஆதம் நபி வங்குசமோ - என்ர
ஆதவனே நித்திரபோ.

பந்தலுக்கு காலுமில்ல
பண்ணினதும் கூடயில்ல
கண்ணொறங்க நேரமில்ல - என்ர
கண்மணியே நிந்திரபோ.

நானழுது ஓயவில்ல
நாவிலயும் தண்ணியில்ல
தானழுது மாயிறென்ன - என்ர
தங்கமகன் நித்திரபோ.

பான பெரிசுமில்ல
பந்திபோட ஆளுமில்ல
ஏனம் எதுவுமில்ல - என்ர
எளந்தளிரே நித்திரபோ.

குண்டு மல உச்சியில
குறிஞ்சிப்பூ பூத்ததுபோல்
மகனாப் பொறந்திரிக்காய் - என்ர
மல்லிகையே நித்திரபோ.

தாழம் மலரே கண்ணே
தத்தி வெரும் மாதளயே
செவ்வல் பிலாச் சொழயே - என்ர
சீதவியே நித்திரபோ.

தேனே திரவியமே ஆரும்
திங்கவொண்ணா மாங்கனியே
மானே மயிலே - என்ர
மணி வெளக்கே நித்திரபோ.

குத்து வெளக்கே என்ர
குலக் கொழுந்தே மாதவமே
கல்புக் கனியே - என்ர
கண்மணியே நித்திரபோ.

சோலக்கிளியே என்ர
சொர்க்கத்துச் செங்கரும்பே
மாலை நெலவே - என்ர
மரகதமே நித்திர போ.

அத்தி மரம் பூக்குறெல்ல
அரசங்காய் இனிக்கிறெல்ல
ஏலங் குருத்தே - நீயும்
ஏண்ட மட்டும் நித்திரபோ.

சித்திரமும் கைப்பழக்கம்
செந்தமிழும் நாப்பழக்கம்
முத்தே மணியே - என்ர
முழுமதியே நித்திரபோ.

நட்சத்திரமே நட்ட
நடு நிசியின் தேன்கனவே
தென்றல் உருவே - என்ர
தீந்தமிழே நித்திரபோ.

கல்லுலயும் நீர் வடியும்
கல்புலயும் தான் கசியும்
படச்சவனே பாப்பான் - என்ர
பால் குடமே நித்திரபோ.

பனியும் பொழிஞ்சிரிக்கி
பந்தலுந்தான் பூந்திரிக்கி
நெலவும் கெளம்பிரிக்கி - என்ர
நிம்மதியே நித்திரபோ.

அக்கரைப்பற்று பதுர் நகர் மீலாத் விழா 2012

தண்ணீருக்கு வந்த தாகம்

ஓர்ரார் ஓர்ழக்கார் எண்டு
ஒருத்தருக்கு நான் வாண்டன்
கொண்டார் குடுத்தார் - அந்தக்
கூட்டலெண்டா வெளங்கயில்ல.

பாத்தாலும் பூப்போல
பழகிருவார் தேன்போல
கதப்பார் கனிபோல - அந்தக்
கணக்கு மட்டும் வெளங்குறெல்ல.

கொள்ள நெருப்பு வெப்பார்
கூடருந்து குளிர் காய்வார்
ஆகு மட்டும் கூடரிப்பார் - அவர்
ஆற வெச்சித் திங்கிறெல்ல.

வெட்டி முறிப்பனெம்பார்
வேரோட திம்பனெம்பார்
கடிச்சிப் புழிஞ்சிருவார் - அந்தக்
காரமொண்டும் வெளங்குதில்ல.

கண்ணில் பசியறியும்
கலையும் வெளங்குதில்ல
கேட்டும் கெடக்கிதில்ல - என்ன
கிட்டருந்தும் லாபமில்ல.

தாளம் தெரியாம
தனி ராகம் பாடுறென்ன
ஆழம் அறியாம - இப்ப
அந்தரத்தில் நிக்கிறென்ன

கண்ணால திண்டுருவார்
கல்லுலயும் நாருரிப்பார்
கண்டதெல்லாம் கையடிப்பார் - இதக்
கனிய வெக்கத் தெரியிதில்ல.

கொவ்வி இழுத்துருவார்
கொண்ட கட்டிப்பூமுடிப்பார்
அள்ளி அணைப்பார் - அந்த
அளவு மட்டும் வெளங்குதில்ல.

பச்சக் கிளி இரிக்க
பக்கிளுக்கும் தொண்டு வெப்பார்
உச்சி மகிழ்ந்துருவார் - அந்த
ஒண்டு மட்டும் தெரியிதில்ல.

அள்ளி எடுத்துருவார்
ஆச தீரக் குடிச்சிருவார்
தள்ளிக் கெடப்பார் - என்ர
தாகமெண்டாத் தீருறெல்ல.

என்ர வாழ மட்டுமிது
எடம் மாறிப் பூக்குறென்ன
கொண்ட உள்ள சாவலிது
கொறயிரிக்கும் மாயமென்ன.

"அரச இலக்கிய விழா 2013"
பிரதேச, மாவட்ட மட்ட பரிசு பெற்றது

பட்டணத்துத் தங்கம்

பட்டணத்துத் தங்கமொண்டு
பளபளண்டு மின்னுறென்ன
பாத்திரிக்க கூடுதில்ல - என்ன
பண்ணுறதோ நானறியேன் ஆண்

கத்திரிக்கோல் போல ஒங்குட
காலுரண்டும் பின்னுறென்ன
நடக்க எசக்கமில்ல - இப்ப
நாவு ருசி கேக்கிறதோ பெண்

கத்திரிக்கோலெண்டாலும்
கனத்தவேல செஞ்சிரலாம்
காணாத்த பொம்மபோல - இந்தக்
களியுறுண்ட கதக்கிறென்ன ஆண்

பாத்தாக் களியுறுண்ட
படச்சி வெச்சாப் பஞ்சுறுண்ட
தெவிட்டாத தேனுறுண்ட - இது
திங்க மட்டும் கெடக்கமாட்டா பெண்

கழுத்திலென்ன மாலயிது
கடனுக்கு வாங்கினதோ
கருகமணி முத்து ரெண்டும் - இப்ப
கைமாத்தாக் குடுக்குறதோ ஆண்

வாங்கிப் பழகினது இந்த
வாய்க்கியிப்ப வந்திரிச்சோ
வவ்வாலப் போல நீங்க
வளஞ்சி திரியிறென்ன பெண்

அடிச்ச கச்சான் காத்தில் பெரும்
ஆணி வேரறுந்த மரம்
கெடக்கிறது போலரிக்கி - இப்ப
கிட்ட வந்தா கோவமென்ன ஆண்

அன்புக் கரச மரம்
ஆதரவுக் கால மரம்
மூடி வளத்த மரம் - இதில்
முட்ட வந்தா மட்டடிதான் பெண்

கட்டிலெண்டாலும் தாங்கா
கை காலுக்கும் அடங்கா
தவறியுழுந்தா - நெலம்
தாங்குமெண்டு நம்பயில்ல ஆண்

கச்சானடிச்சா நீங்க
காத்தில் பறந்துராம
கட்டிவெக்கக் கட்டயில்ல - இப்ப
காவலென்ர தலயிலதான் பெண்

அட்டாளைச்சேனை கலைவிழாவில் - 2012

சேருறத நம்பயில்ல

தாழ வெச்ச வாழயெல்லாம்
தன்னால தான் வளரும்
ஏழ வெச்ச வாழயிது - என்ன
எப்புடியோ கார் றஹ்மான்.

நெஞ்சில் வருத்தம் என்ர
நிம்மதியில் தாழமுக்கம்
மனசில் கொழப்பம் - வேற
மாயமென்ன செய்யிறதோ

ஒட்டி ஒறவாடி நல்ல
ஒய்யார மாயிருந்து
வெட்டி முறிச்சி - அவர்
வேரோட சாச்சதென்ன.

கண்மணியா நானிருந்து
கஷ்ரமெல்லாம் தான் செமந்து
பட்டதுயரும் மறந்து - அவர்
பண்ணுறது நியாயமில்ல.

ஈரலுக்கும் தாமரக்கும்
எட நடுவில் வெச்சிருந்து
காத்ததுக்குக்கூலி - அவர்
கை நெறயத் தந்ததென்ன.

தென்னயில வண்டுழுந்து
திண்டழிச்சிப் போனது போல்
பண்ணயில கையெறிஞ்சி - அவர்
பாழடிச்ச நியாயமென்ன.

ஓட நதியாகு மெண்டு
உசிரில் உசிர வெச்சிக்
காத்திருந்தேன் நானும் - என்னக்
கதறவெச்சிக் கொண்டதென்ன.

ஆலம் பழமெண்டு நானும்
அறவே நெனக்கயில்ல
அள்ளி வெச்சிப் பாத்தேன் - இப்ப
அரும எல்லாம் வெளங்குதுகா.

அத்திமரம் பூக்க இந்த
ஆண்பனயில் நொங்கு தின்ன
காத்திரிக்கத் தேவயில்ல - இனிக்
கரயேறப் பாக்கிறதான்.

கட்டெறும்புக் கரியெடுத்து
கரும்பூன நாக்கெடுத்து
சேத்திக்கிச் செஞ்சாலும் - இனிச்
சேருறத நம்பயில்ல.

காட்டாத்து வெள்ளமது
கர புரண்டு போறதென்ன
ஏழயென்ர வாசலில - அழ்ழா
எப்ப மழ பேயிறதோ.

பிரியா விடை

அகிலம் படச்ச அந்த
அழ்ழாவின் கருண கொண்டு
செல்லும் கவியில் - நீயும்
சுகம் தருவாய் ஆண்டவனே.

அர்ரஹீம் என்பதது
அழ்ழாவின் அருட் கொடையாம்
கொட்டிப் பரப்பி - நீயும்
குளிர வெப்பாய் யாறஹ்மான்.

அள்ளி எறச்சாலும் கல்வி
அறவே கொறயிறெல்ல
அர் ரஹீம் என்னும் - எங்குட
அகம் நெறஞ்ச பள்ளியில.

பட்டியடிப் புட்டி மண்ணும்
பச்ச எணல் மரமும்
சூழவுள்ள காத்தும் - நல்லா
செல்லி வெச்ச கல்வியிது.

அந்தி பகல் முழுக்க
ஆச மனசி வெச்சி
செஞ்சி வெரும் கூடம் - இந்த
செறப்ப நீங்க கண்டயளோ.

பக்க வேரப் போல மக்கள்
பக்க துணையாயிருந்து
அந்தரங்க அன்பு வெச்ச - இந்த
அமைப்ப இப்ப பாத்தயளோ

ஒழுக்கமுள்ள கல்வி தந்து
ஒருமனமாய் பாடு படும்
ஆசான் அனைவரையும் - நீ
ஆதரிச்சி வெய் றஹ்மான்.

ஓடி வெளயாடி நாங்க
ஒத்துமயா கை கோத்து
இருந்து படிச்ச எடம் - இத
எழக்குறெண்டா மனசியில்ல

சீண்டி வெளயாடி நாங்க
சில்லறயா சண்ட செஞ்சி
கூடி வெளயாடினெடம் - எப்ப
கூடுறதோ நானறியேன்.

நித்திரய வித்து நானும்
நெறஞ்ச நேரம் கண்முழிச்சி
பின்னிரவும் பாத்தேன் - இந்தப்
பிரிவ மனம் தாங்குதில்ல.

பாளையுள்ள தென்ன எப்ப
பாத்தாலும் பூத்திரிக்கும்
ஏண்ட மட்டும் கூடருந்து - இந்த
எணல வெச்சிக் காப்பயளோ.

ஆத்து மணல் கரயில்
அலையெழுதும் சித்திரத்த
நேத்து வந்த காத்து - இப்ப
நெல கொலச்சி நிண்டதென்ன.

நாளையொரு காலம்
நல்லதொரு கூடலில
நாமெல்லாம் சேர - நீயும்
நாடிருவாய் ஆண்டவனே.

எங்கு நாம போனாலும்
ஏண்ட மட்டும் பேறுபெற்று
நாமம் சிறக்க - நீயும்
நாடி வெப்பாய் யாறஹ்மான்.

அக் / பட்டியடிப்பிட்டி அர்ரஹீமியா வித். தரம் 09 மாணவர்களின் விடுகை விழாவின் போது - 2011

கலை பூத்த கருங்கொடி

கலைகள் வளரும் எங்கிட
கருணையுள்ள பூமியிது
தேடிவரும் ஊரார் - இஞ்ச
தெவிட்டு மட்டும் நிண்டுபோவார்

வளச்சி வெர ஆறு கொளம்
வளம் முழுக்க உள்ள எடம்
கடல் காத்தும் கொண்ட - ஒரு
கருங்கொடியூர் தீவுயிது

காலாத்திப் போட்டு நீங்க
கரயில் வெதச்சாலும்
காயும் முளைக்கும் - நல்ல
காரமுள்ள பூமியிது

நாவலரும் பாவலரும்
நாடறிஞ்ச ஒலி மாரும்
குடியிரிக்கும் பூமியிது - இஞ்ச
கொறயிரிக்க நியாயமில்ல

ஏவல் வெலகலெல்லாம்
எடுத்தியம்பும் ஆலிமுகள்
பொறந்து வளந்த எடம் - நல்ல
புகழுதித்த பூமியிது

சாதி மதம் பாக்காம
சாதனக்கி கை குடுத்து
வந்தாரை வாழ வெச்சி - நல்லா
வழியனுப்ப பழகினெடம்

சூது வாது ஏதுமில்ல
சோம்பேறித் தனமுமில்ல
கள்ள மனமுமில்ல - நல்ல
காவலுள்ள பூமியிது.

வைத்தியமும் பொறியியலும்
வக்கீலும் கணக்குனரும்
கலை படிச்ச மேதைகளும் - உள்ள
கண்ணெறஞ்ச ஊருயிது.

மாசில்லா ஆடவரும்
மானமுள்ள மங்கையரும்
சாரமுள்ள சாதி கொண்ட - நல்ல
சங்கையுள்ள ஊருயிது

தேனில் கலந்தெடுத்த
செங்கரும்புச் சாறுபோல
பேசத் தெரிஞ்ச - நல்ல
பெருமயுள்ள ஊருயிது

ஈர மனமும் நல்ல
இங்கிதமும் தான் தெரிஞ்ச
பால் போல் குணமும் - உள்ள
பண் நெறஞ்ச ஊருயிது

தானாய் வளிஞ்சதில்ல
தள்ளி நீண்டும் பாத்ததில்ல
வந்தாலும் உர்றதில்ல - நல்ல
வைரமுள்ள மண்ணுயிது

அக்கரைப்பற்று பாதை திறப்பு விழா 2004

அழிந்து போன இயற்கை

செவரில்லாச் சித்திரமோ
சீவனில்லா வெறும் ஜடமோ
தாளில்லா மையெழுத்தோ - எந்த
தாயுமில்லா மகப்பிறப்போ

காடு வெட்டி வேர் புடிங்கி
கனத்த சனம் மீன் புடிச்சி
வாழ்ந்த கொளம் பாருபுள்ள - இப்ப
வழி நெறய ஆளிரிக்கி

இயற்கை என்னும் சாமான்
இறைவனோட சீதனந்தான்
அழியாப் பொருளா - நீங்க
ஆளுமட்டும் பாத்திருங்கோ

காடு கடல் மலையும்
கனிய வளம் அத்தனையும்
ஆறும் கொளமும் - இப்ப
அழியிறதப் பார் சனங்காள்

பறவ பச்சி யெல்லாமிஞ்ச
பசி தீத்து போன கொளம்
பொலிவெழந்து போன - இந்த
பொறிய இப்ப பார் சனங்காள்

ஆறும் அழிஞ்சி வெறும்
அரி வாய்க்கால் ஆனதென்ன
சோறும் கொழஞ்சி - இந்த
சொதிக்கடங்கா மாயமென்ன

கட்டடங்கள் கட்ட எண்டு
கன மரங்கள் அழிஞ்சதில
கால் சூடும் தாங்குதில்ல - இப்ப
கண்நெறய நித்திரெல்ல

மரமழிஞ்சி வெறகானா
மாரிக்கித் தானொதவும்
சுத்தமான காத்த - நாம
சுழியோடினாலும் காணவெரா

கடக்கரையில் மண்ணெடுத்து
கரையழிஞ்சி போகுதெண்டா
காலமெல்லாம் நாம புள்ள
கதச்சிரிக்க எங்க போற

கரயும் அழிஞ்சி இஞ்ச
கனமரமும் கொல்லாந்து
வாழ்வும் வளமும் - பெரும்
வஞ்சனையாய் ஆன தென்ன

பாதசெய்ய எண்டு செல்லி
பனதென்ன பால பலா
பல நூறு மரமெழந்தா
பாலைவன மாகிறதான்

வழிப்போக்க ரெல்லாம் இந்த
வழி நெடுக எணப்பாறி
இருந்த மருத எங்க - அந்த
ஈரமாலும் காணமில்ல

கோழி முட்ட வித்துக்
கொறட்டக் கருவாடு வாங்கி
திண்ட சனம் இஞ்சரிக்கி - எப்ப
திருந்துமடோ ஆண்டவனே

தணியாத தாகம்

அகிலம் படச்ச அந்த
ஆண்டவனைக் கையேந்தி
நாவில் சுரக்கும் - இந்த
நல்ல கவி நாமுரைப்போம்

தைக்கா நகரில் - கல்வித்
தாகமெல்லாம் தீத்து வரும்
ஸஹ்றாவின் மாணவர் நாம்
சங்கையுடன் சலாமுரைப்போம்

அறிவும் செறிவும் தந்து
அனைவருக்கும் உறவு தந்து
சேர்த்து வெச்ச அழ்ழா - உன்ன
சிரம் தாழ்த்தி வணங்குகிறோம்

மாணவர்கள் கௌரவிக்கும்
மகிழ்ச்சிப் பெருவிழாவில்
வந்திரிக்கும் அதிதிகளை - நாங்க
வாயாற வாழ்த்துகிறோம்

பூத்த மரமாகி அந்தப்
பூவில் மணமாகி
காத்தில் இசையாகி - ஸஹ்றா
கலந்திரிக்கும் கனவோட

அம்பது வருசம் நாங்க
அடஞ்ச துயர் கொஞ்சமில்ல
நெஞ்சும் நெறயிதில்ல - இந்த
நெலம இப்ப கண்டயளோ

கொடுக்கும் பணிமனயில்
குடியிருந்து வந்தோரை
கெடைக்கும் வழிசமைக்க நீயும்
கிருபை செய்ரா ஆண்டவனே!

நெலவில் பனியுழுந்து
நெலம் குளுந்து போனது போல்
மனங்குளிரத் தந்துதவ - இந்த
மன்னர்களை வெய் றஹ்மான்

மாடியும் கட்டி இந்த
மக்க ளெல்லாம் மெய் மறந்து
அண்ணாந்து பாக்க - நீயும்
அருள் புரிவாய் ஆண்டவனே

கிழக்கும் வெளிச்சி ஒங்குட
கிரகமெல்லாம் தான் கழிஞ்சி
அள்ளி வழங்க - ஒங்கள
ஆயிசோட வெச்சிரெட்டும்

சோலக்கிளியும் இந்தச்
சாலயில வந்து நிண்டு
அண்ணாந்து பாத்து - தினம்
ஆண்டவனைக் கையேந்தும்

வாய்க்கால் நெறஞ்சி அந்த
வண்ணமயில் கால் கழுவி
ஏறி நிண்டு ஆட - ஒரு
எடம் தாடா ஆண்டவனே!

புலமையாளர் விழா - 2011

வண்ண மயில் வாடாதே!

கூந்தல் அழகும் ஒங்குட
குண்டு மணித் தோடழகும்
பாத்தேங்கா மச்சி - நெக்கி
பசிக்கிறென்ன நாள்க் கணக்கா — ஆண்

வெதச்சிப் பழுத்து நல்ல
வேளயில வெட்டி வெச்சி
திண்டாத்தான் மச்சான் - ஒங்குட
தீரவொண்ணாப் பசியடங்கும் — பெண்

மஞ்சலில பாவாட வெள்ள
மல்லியப்பூ தாவாணி
போட்டு வெரும் நேரமெல்லாம்
பொறுக்குதில்ல பாரு புள்ள — ஆண்

பாத்தேங்கா மச்சான் ஒங்குட
பாசாங்கு அவதியெல்லாம்
நேசம் இருந்தா - நீங்க
நிம்மதியாக் காத்திரிங்கோ — பெண்

தனிமையில கண்டு நானும்
தாறதுக்கு வெச்சிரிக்கேன்
எடமிருந்தா பாருபுள்ள - நாம
ஏண்ட மட்டும் கதச்சிரிப்பம் — ஆண்

எடமெண்டா இரிக்கி எங்கிட
எழுவெட்டான் கிறவுண்டு போல
மானமெண்டா மச்சான் - பெரும்
மலயளவு என்ன செய்ய பெண்

வெளியெறங்கி போன காகம்
வீட்ட வந்து சேரு முன்ன
வாக மரத்தடிக்கி - கொஞ்சம்
வந்திருமா என்ர கிளி ஆண்

காகமெண்டா மச்சான் இஞ்ச
கனத்த அவதியில்ல
கிக்கிலிப்பே ஒண்டிரிக்கி - சும்மா
கிறுகயுந்தான் உடுகுதில்ல பெண்

பட்டிமோட்டுப் பால் காச்சி
பனயறுப்பான் மீன் பொரிச்சி
வெச்சிரிகா மச்சி - நானும்
வெயில் சாய வந்துருவன் ஆண்

புளியந்தீவு நெய்யூத்தி
பூப்போல சோறாக்கி
தந்துருவன் மச்சான் - நீங்க
தாலி ஒண்டு கொண்டாங்கோ பெண்

தாலியோட கூற ரெண்டு
தங்கமணிக் கை வளயல்
வேண்டி வெரத் தானிரிக்கன் - மச்சி
வெதச்ச தொண்டும் வெட்டயில்ல ஆண்

வெட்டி முடிச்சி யெல்லாம்
வேண்டிவரும் வேள வெர
காத்திருப்பன் மச்சான் - நீங்க
கைக்கூலி கேப்பயளோ. பெண்

தேனோட பாலமுதும்
திங்க நான் கூலி வாங்கி
வாழ விருப்பமில்ல - என்ர
வண்ணமயில் வாடாதே! ஆண்

அ.பற்று கலாசார மத்திய நிலைய 10 வது வருடவிழா
(பரிசு பெற்றது)

கூலியெண்டா செப்பமென்ன

ஆலத்து முதல் மனிதர்
ஆதம் நபி கால் பதிச்ச
சோலயத்தில் வாழும் - எங்கிட
சொந்தமது சூனியமா

எட்டாம் நூற்றாண்டிருந்து
இலங்கயில குடியிரிக்கம்
எணக்கமில்லாக் கூட்டம் - இப்ப
எட மதிச்சிப் பாக்குறென்ன

அரச பரம்பரக்கி
ஆதிமுதல் நோய் தீக்க
வந்ததென்ன நாங்க -இஞ்ச
வழக்காட நெனக்கயில்ல

மூத்த பரம்பரயும்
முக்குவர மணம் முடிச்சி
வந்ததிந்தச் சொந்தம் - இதில்
வாது செய்ய ஒண்டுமில்ல

சிங்களத்து ரெத்தமெல்லாம்
செவப்பா இரிக்கிறதால்
பச்ச ரெத்தமெண்டா - எங்கள
பகடி பண்ணிப் பாக்கிறது

வந்தான் வெரத்தானெண்டு
வாய்ப்புழுவக் கொட்டுறென்ன
பொறப்புப் பதிவில் - இந்த
புழுகு மூட்ட எங்கரிக்கி

சிங்களத்துச் சிங்கமெல்லாம்
சீரான ஒறவு வெக்க
அசிங்கமெல்லாம் சேந்து - இப்ப
அந்தரத்தில் நிக்கிறென்ன

யாவாரம் செஞ்சி நாங்க
ஆர் வகுத்தில் மண் போட்டம்
தேடிக் கடயொடைக்க - நாங்க
தெரியாமச் செஞ்சதென்ன

சோனிக்குச் சின்னத்து
சுத்தமெண்டு வெக்கிறது
இடுப்பில் பெலப்பு வெர - நாங்க
இதுகளொண்டும் வெட்டுறெல்ல

அச்சாணியப் புடிங்கி
அசஞ்ச வண்டில் கொடசாய
கூடி நிண்டு பாக்க - என்ன
கோதாரியோ நானறியேன்

மானமெண்டா வேதமெண்டு
மனம்முழுக்கத் தச்சிரிக்கம்
கோணலெண்டு ஆரும் - அத
கொற புடிக்கத் தேவயென்ன

நாடும் புடிக்கவில்லை
நஞ்சேதும் வெதக்கயில்ல
கூடி நாங்க வாழ்ந்ததுக்கு - ஒங்குட
கூலியெண்டா செப்பமென்ன

"விடி வெள்ளி "
27.06.2013

கடலுக்குப் போன உசிரு

கட்டு மரத்தோணியேறி
கடலுக்குப் போன மச்சான்
கனநேரமாச்சி - இன்னம்
கரயொதுங்கக் காணயில்ல.

தாலி வித்து தோணி வாங்கி
தனிய ஒழெக்க வெண்டு
போனவெர இன்னம் - இந்த
பொழுது பட்டும் காணயில்ல.

காகமும் கத்துறென்ன
காலும் எழுகுதில்ல
கண்ணும் தொலங்குதில்ல - என்ர
கண்மணியே வா பாப்பம்.

வந்தாச் சொணங்க மாட்டார்
வழியிலயும் நிக்க மாட்டார்
குனிஞ்சா நிமிரமாட்டார் - என்ன
கோவினயோ நானறியேன்.

தங்கலெவ காக்கா நிக்கார்
தம்பிவெவ மாமா நிக்கார்
தங்கம் ஒங்கு வாப்பாவ - அந்த
தாழயோரம் பார் பொடியா.

வாட அடிச்சிருந்தா தோணி
வாங்கலில போயிரிக்கும்
கொண்டல் அடிக்கிறென்ன - என்ன
கொறயிரிக்கோ நானறியேன்.

கப்பல் குறுக்கறுத்து
கடல்ல வல போயிரிக்கோ
கல்லுகள்ள மோதி - தோணி
கண்ட துண்ட மாயிரிக்கோ.

வட்டிலில சோறு கட்டி
வழியனுப்பி வெச்சதென்ன
கட்டின சோறென்ன - ஏதும்
காணாமப் போயிரிக்கோ.

பஞ்சபசி காலமிது
பாதகமேதும் நடந்தா
ஈரக் கொழுந்துகள - இப்ப
என்ன நானும் செய்யிறதோ.

நடுக்கடலில் நாதியில்ல
நாயன் துணதானிரிக்கி
எலக்கறிச் சட்டியிது - நீயும்
எட மறிச்சிராத றப்பு.

ஒன்ன நம்பி நானும் என்ர
உசிர அனுப்பிரிக்கேன்
கொண்டு வந்து சேக்குறெப்ப - என்ர
குடில்ல அடுப்பெரியிறெப்ப.

காணாத்த தோடு ஒண்ட
கண்டெடுத்துத் தந்தது போல்
மனசெரங்கி அல்லா - என்ர
மச்சானச் சேத்திருவாய்.

புள்ளலக்கா புள்ளலக்கா - என்ர
புரிசனாரு வந்திரிக்கார்
கல்லில் வலபொறுத்து - நல்ல
கஷ்ரமெல்லம் பட்டதாங்கா.

கேட்ட எரப்பும் நானும்
கிறிகித் திரிஞ்சதுவும்
பாத்த கண்ணும் பூத்து - மச்சான்
பைத்தியம் போல் ஆயிரிக்கி.

பாரபடுகு தெண்டு மச்சான்
பதறியடிச்ச தென்ன
காரலயும் காணயில்ல - என்ன
கக்குசமோ நானறியேன்.

கொண்டு வந்து சேத்தான் என்ர
குஞ்சிகளின் மொகம்பாக்க
கண்டு தெருவான் - அந்தக்
கருணையுள்ள யாறஹ்மான்.

இருட்டில் தொலைந்த நிலவு

அன்புருகும் நேசமுடன்
அருள் பகரும் ஆசியுடன்
சிந்து கவியுரைக்க - எங்கள்
சிந்தையைச் சீர் செய் றஹ்மான்.

ஆசயில பாத்தி கட்டி
அதுல மனசி வெச்சி
தண்ணி ஊத்தி வெச்சிரிக்கி
தாகமெண்டா வந்துருங்கோ.

உழுந்து வெதச்சி நம்முட
ஊரெல்லாம் காச்சிரிக்கி
உமி கூட வந்து - இந்த
ஒரலியும் தங்குதில்ல.

தீராப் பசியும் நாங்க
திண்டாடும் வேதனயும்
பாத்தா வெளங்குறதோ - இது
பகல் கனவு ஒண்டுமில்ல.

கொழிச்சிப் பதறெடுத்து
கொண்டெறிஞ்சி பழகினெடம்
கண்டறிஞ்சி நாங்க - அத
கரயேத்தி வெச்சிரிக்கம்.

ஏறி நிண்டு பாட இஞ்ச
எடமில்ல எண்டு செல்லி
ஏழெட்டெடம் பாத்து - நாங்க
ஏமாந்து போயிரிக்கம்.

சேதாரமில்ல வேற
செய்கூலி ஏதுமில்ல
தானாய் மனமெரங்கி - எம்பி
தந்திரிக்கார் ஒலி பெருக்கி.

மாடி ஒண்டு கட்டுறெண்டு
மனசெரங்கிச் செல்லிரிக்கார்
காலம் துணயிருந்து - அவரக்
காப்பாத்தி வெய் றஹ்மான்.

வந்து சேரும் புள்ளயள
வெச்சரிக்க எடமுமில்ல
கேட்டும் கெடக்கிதில்ல - நாங்க
கீழ் சாதி ஏதுமில்ல

பிரதி மிசினுமில்ல
பிரிண்டராலும் ஒண்டுமில்ல
கலரெண்டாக் கேக்கயில்ல - ஒரு
கறுப்பயாலும் காணயில்ல

கிடுகால் எளச்சி நாங்க
கீழ் மாடி செய்யரிக்கம்
நல்ல களி உண்டு மெண்டா
நடுச்செவர வெச்சிரலாம்

பாள படும் பாடு இந்தப்
பன்னாட யாதறியும்
ஓல அழுது - இஞ்ச
ஒண்டுமாகப் போறதில்ல

வேண்டுதலும் கூடரிக்கி
வெவ்வேற தேவரிக்கி
ஒவ்வொண்டாச் செல்லிரிக்கி - நீங்க
ஒப்பேத்தித் தெருவயளோ

அம்பதால தாண்டி இஞ்ச
அர நரயும் முழுசாகி
கண்டதுவும் ஒண்டுமில்ல - இத
கருண கொண்டு பாப்பயளோ

இருந்து எணப்பாறி நீங்க
இன்னொருக்கா தலமுழுகி
தனிச்சிருந்து பாத்தா - என்ன
தன்மயெண்டு தான் தெரியும்

வேரறுத்த மரமானோம்
வெந்தவிஞ்ச காயானோம்
காஞ்ச கரும்பானோம் - எங்கிட
கஷ்ரமெல்லாம் ஆரறிவார்

புலமையாளர் கௌரவிப்பு விழா 2012
தைக்கா நகர் அக்/ ஸஹ்றா வித்தியாலயம்

அழ்ழா இரிக்கான்

அழ்ழா இரிக்கானெண்டு
ஐ வொகுத்தும் செல்லுறென்ன
பள்ளி தொழ நேரமில்ல - சனம்
பகுத்திரமா வாழுறதோ.

புள்ளயள ஓதிவிப்பார்
பொண்டிலோட கதயளப்பார்
பள்ளியடிப் பக்கம் அவரப்
பாக்குறெண்டாத்தான் வருத்தம்.

ஓதிப் படிச்சி சனம்
ஊர் புகழ வாழுகினம்
சீர் கெட்ட வாயால - மெத்த
சீதனமும் கேக்கிறதோ

ஆதனமும் வேணுமாங்கா
அழகான பொண் வேணுமாங்கா
காசி பணம் வேணுமாங்கா - அந்தக்
கசகறணக் காறனுக்கு

மாத்து மதக்காறரெல்லாம்
மங்களமா ஊடு கட்டி
பொண்ணெடுத்து வெச்சிரிக்கான் - இந்தப்
புதுமயெல்லாம் காணலயோ

பொய் களவு வேணாம்
பொறமேதும் பேச வேணாம்
பொறாம எல்லாம் வேணாம் - நல்ல
பொறுமமட்டும் வாழவெக்கும்

பெத்து வளத்து நாம
பேரு வெச்சி வேலயில்ல
சீதணமா வாங்குறெண்டா - நாம
சீரழிய வேண்டிவெரும்

சதகா சகாத்த நாம
சாதி சனம் பாத்தெடுத்து
குடுத்தாக் கொறயும் - நம்முட
கொஞ்ச நெஞ்ச பாவமாலும்

நோம்பு புடிங்கோ பெரும்
நோம்பலங்கள் தீருமெண்டு
வள்ளல் நபி செல்லிரிக்கார் - அந்த
வழிப்பொறகு நடந்திருங்கோ

வட்டி குட்டி எண்டு ஆரும்
வாழ் நாள்ள குடுத்திரொண்ணாம்
நெறஞ்ச கூலி வேல செஞ்சி - நாம
நிம்மதியா வாழலாங்கா

நெறம்பச் சனமிரிக்கி
நிம்மதியக் காணயில்ல
சீதணமெண்டு செல்லி - ஒண்டும்
சில்லறயா வாங்குறெல்ல

பெருமக் கொடயும் சிலர்
பித்தலாட்டம் பண்ணுறதும்
எலிபோல் உலவுறதும் - என்ன
ஏளனங்கா பாருபுள்ள

கேப்பாரும் ஆருமில்ல இந்த
கெட்ட சனங்களுக்கு
அழ்ழா இரிக்கான் - அவன்
ஆகுறத்தில் பாத்துருவான்

அட்டாளைச்சேனை மீலாதுன் நபி விழா 1989

பெற்றதால் பெற்ற பெருமை

ஓடாகத் தேஞ்சொழச்சி
ஓதிப் படிக்க வெச்சன்
மாடியில இப்பரிக்கான் - என்ன
மனிசனெண்டும் பாக்குறெல்ல.

வார இழுத்தெடுப்பான்
வாறதெல்லாம் கைலெடுப்பான்
ஏன்ரா எண்டு கேட்டா - என்ன
எளக்காரமாத்தான் பாப்பான்.

நடுச்சாமம் தான் வெருவான்
நல்லகறி வேணுமெம்பான்
அரச்ச கறி இல்லயெண்டா - நாம
அடுத்த ஊட்டில் நிக்கவெரும்.

ஓடி வெருவானவன்
ஓடன இப்ப வேணுமெம்பான்
ஒழச்சாத் தெருவனெம்பான் - ஒரு
உமியயாலும் காணயில்ல.

கட்டிலொண்டு வேணுமெண்டான்
கம்பியூட்டர் வேணுமெண்டான்
வாங்கிக் குடுத்த கடன் - இன்னம்
வழி நெடுக எனக்கிரிக்கி.

பல்லக் கடிப்பானவன்
பைத்தியமா எண்டு கேப்பான்
செல்லால் அடிப்பான் - என்ன
செறயில் மட்டும் வெக்கயில்ல.

கூப்புட்டா நிக்கமாட்டான்
கூடருந்து திங்கமாட்டான்
படுத்தா ஒழும்ப மாட்டான் - அந்த
பழக்கமின்னம் மாறயில்ல.

பட்டணியா நான் கெடந்தும்
பாச மழ பொழிஞ்சி
பண்ணாக வெச்சிருந்தன் - என்ன
பாக்கயாலும் வாறதில்ல.

ஒசந்த வெலக்கி நல்ல
உடுப்பெடுத்து நான் குடுத்தும்
கசக்கி எறிஞ்சியவன் - என்னக்
கடும் நெருப்பாத்தான் பாப்பான்.

வாப்பா எண்டு என்ன அவன்
வாய்நெறயச் செல்லமாட்டான்
கிட்ட நிக்க மாட்டான் - என்னக்
கேலி மட்டும் செய்யயில்ல.

பல்கலைக் கழகம் போனான்
பாக்கவெண்டு நான்போனேன்
கூடருந்த கூட்டாளிக்கி - என்னக்
கூலி வேலக் காறனெண்டான்.

என்னயெண்டாலும் புள்ள
எப்பயெண்டாலும் வெருவான்
எண்டு நெனச்சி ரொண்ணாம் - "அவள்"
ஈறலுல செய்ய வெக்காள்

வகுத்தெரிச்சல் காறி என்ர
வம்மிசத்தில்லில்லாத
புள்ளயொண்டப் பெத்து - இப்ப
புதினமென்ன காட்டுறது

சீரழிவு செஞ்சிருந்தும்
செலபோல நானிருந்தன்
மனமெண்டா நோகயில்ல - அவன்
மாண்டிரிப்பான் நொந்திருந்தா

மகாண மட்ட பாரம்பரிய
கலை கலாசாரப் போட்டி 2013
(பரிசுபெற்ற பாடல்)

கடசிவெர வந்திராத

கரடியார்ர ஊட்ட இந்தக்
காகமெல்லாம் போகுதெண்டு
நானுந்தான் போனேன் - என்ன
நாள் முழுக்க வெரசினாங்க நாய்

என்ன நடந்ததெண்டு
ஏனங்க நீ போனாய்
செல்லு கதய கடும்
சீரியசு போலரிக்கி ராத்தா

கண்ணாளாத் தீனுமில்ல
காகமெல்லாம் கத்தினது
போனேங்கா ராத்தா என்னப்
பொழுது பட்டும் உடயுமில்ல நாய்

அம்பட்டு ஆக்களுக்க
ஆரு ஒன்ன வெரசினது
என்ன செஞ்சாய் அப்பிடி - நீ
எதயாலும் நக்கிரிப்பாய் ராத்தா

இல்ல ராத்தா இல்ல
எதயும் நான் நக்கயில்ல
தூர நிண்டு பாத்ததுதான் வேற
தொந்தரவு செய்யயில்ல நாய்

தூரத்தில் நிண்டிருந்தா
தொந்தரவும் இல்லயெண்டா
சும்மா வெரசிறெண்டா - நீ
சொணங்கிரிக்காய் போலரிக்கி ராத்தா

மாடறுத்த உட்டிலகா
மணமெண்டா தாங்கயில்ல
சுத்தித் திரிஞ்சதுதான் - வேற
சொணங்க அங்க என்னரிக்கி நாய்

மனிசன் இருந்தடெத்த
மடத்தனமாப் போயிரிக்காய்
வெரசினதால் தப்பிரிக்காய் - சும்மா
வேற ஒண்டும் நடக்கயில்ல ராத்தா

கறடியார்ர கிங்கிணிய
கறடி பெத்த புள்ளயள
மனிச னெண்டா சென்னாய் - அத
மறக்க வொண்ணாகா ராத்தா நாய்

மிச்ச சொச்ச மெண்டா நொக்கு
மெலிவாக் கெடச்சிரிக்கும்
அறுத்தெடத்த போனா - கடும்
அடி ஒததால் பாத்தயா நீ ராத்தா

கால நேரம் நல்லமில்ல
கடும் பசியாத் தானிரிக்கி
கேட்டு இஞ்ச ஆர்தெருவா - ஒண்டும்
கெடக்கிமெண்டு நம்பயில்ல நாய்

பஞ்ச பசி காலமிது நீ
பதறித் திரியிறென்ன
ஒண்ட புதினமிது - இப்ப
ஒன்ன விட மோசமிஞ்ச ராத்தா

எல்லாமிரிக்கி அத
எப்பிடி நான் செல்லுறது
சென்னா அடிச்சி என்னச்
சொணங்காம பொதச்சிருவாய் நாய்

காயவெச்ச மீனுகள
கண்ட கத போலரிக்கி
இடுப்ப ஒடச்சி ஒன்ன
இழுக வெப்பன் சொணங்கிராத ராத்தா

இழுகினாலும் ராத்தா
இதுல ஒண்டத் தின்னாம
போக மனமில்ல நெக்கிப்
பொறகால வந்திராத நாய்

கறடியாரர் பொண்டி ஒண்ட
கழுத்தால போட்டிருந்தா
கவ்விரிக்க மாட்டாய் இஞ்சால
கடசி வெர வந்திராத ராத்தா

நூதனத்தார் நித்திரையாம்

நோம்புத் தலைப் பொறையில்
நூதனத்தார் நித்திரையாம்
கண்முழிச்சிப் பாத்தாராம் - அப்ப
காலையில ஏழரையாம்

விம்மி வெறச்சி அவர்
வேர்வையில தான் நலஞ்சி
அழுது பொலம்பிரிக்கார் அங்க
ஆனதுதான் ஒண்டுமில்ல.

தனியப் படுக்கமெண்டு
தலமாட்டில் போண வெச்சார்
வெற்றியில சாச்செறங்கி அது
விடியுமட்டும் அடிக்கயில்ல.

ஆத்திரத்தில் போணெறிஞ்சி
அவிச்சிக் கடஞ்சிரிக்கார்
கூட்டிப் பொறக்கி வெச்சி அதக்
குப்பையில கொட்டினாராம்.

வரிசயில நிண்டு அவர்
வால் முள்ளும் வாங்கி வந்து
ஆக்கினதான் மிச்சம் அத
அறவே தொட்டும் பாக்கலையாம்.

பண்ணெடுத்து பாகெடுத்து
பழமெல்லாம் வாங்கி வெச்சி
தயிரும் ஒறய வெச்சாம் அது
தாழியோடத்தான் கெடக்காம்

ராவெல்லாம் கண்முழிச்சி
றாகத்தாக் கதச்சிருந்து
இறாலும் பொரிச்சி வெச்சி நல்ல
ஏற்பாடும் செஞ்சிரிக்கார்.

மீரான் காக்காவொண்டி வந்து
மெல்லயாலும் ஒழிப்பிருந்தா
நோம்பப் புடிச்சிரிப்பேன் எண்டு
நொந்து வேற ஏசினாராம்

எப்ப வெரும் நோம்பு எண்டு
ஏங்கிக் கெடந்ததுக்கு
எளவடிச்ச நித்திரதான் அவர
ஏமலிக்க வெச்சதாங்கா.

வாடின வெண்டியில
வதங்கின பிஞ்சிபோல
காஞ்ச பயித்தபோல அவர
காண மனந்தாங்குதில்ல.

பள்ளியில போயழுது
பகல் முழுக்க ஓதிரிக்கார்
கேட்டிரிக்கார் தெளபா நீயும்
கிருப செய்வாய் யாறஹ்மான்.

வழக்கமுள்ள வாலாட்டிகள்

ஆத்துல ஓர்ற தண்ணி
அள்ளிக் கொறயிறெல்ல
ஏத்து வெச்சி ஆரெறெச்சும் இஞ்ச
எதுவும் நடக்கிறெல்ல

பொறப்பில் கலப்பிருந்தா
புதுப்பதிவில் வாறதில்ல
நடப்பில் கொறயிருந்தா அது
நல்லாப் பொறந்ததில்ல

செய்யும் ஒணச்சியில்ல
செய்றவென உர்றதில்ல
நெஞ்சில் பெலப்புமில்ல பெரும்.
நெனப்பு மட்டும் கொறயிறெல்ல

நெனப்பு ஒயந்து இப்ப
பொளப்பக் கெடுத்திரிக்கி
நிம்மதியத்தான் தொலச்சி இன்னம்
நித்திரயில் ஏங்கிறென்ன.

வகுறுபெருத்த இந்த
வாலாந்தவக்க நாலு
வாயக்குடுத்து - இப்ப
வழிஞ்சி கெடக்கிறென்ன

வஞ்சம் நெறஞ்சி இப்ப
வாயால் வடியிறென்ன
வடிச்சித் தொறச்சி அந்த
வடிச்சலில கொண்டு கொட்டு

தெப்பத்துத் தண்ணியில
தேன்கலந்து போகுதெண்டு
நஞ்சிவெச்சிப் பாத்த அந்த
நாய்களத்தான் கண்டயளோ

ஊடுடாக் குந்திருந்து
ஒப்பனக்கித் தானழுது
மதிகெட்டு நிண்டு இப்ப
மாயிறெதப் பாத்தயளோ.

கழண்டவயற ஆரும்
கணக்கே எடுக்குறெல்ல
செக்கு மாட்டுக்காரும் இஞ்ச
செலயேதும் வெக்கிறெல்ல

வாத்து மடயனுகாள்
வஞ்சனைகள்தான்பலியா
ஓல ஒமலனுகாள் ஒங்குட
ஓதலென்ன சூனியமா

நாயோட கழுதசேந்து
நல்லதொண்டும் செய்யிறெல்ல
கொடலயில திண்டபண்டி இது
குண்டுபட்டும் மாறுறெல்ல

வாசலுக்கு வாறதெப்ப

கால்நூறு ஆண்டு முன்ன
கந்திரிக்கி வந்து போன
கந்தசாமி வாத்தியார இப்ப
காணயாலும் கெடக்கிதில்ல

சந்தணமும் குங்குமமும் வெச்ச
சாந்த மொகத்தில் முழிக்க
வணக்க மெண்டு செல்லி எங்குட
வாசலுக்கு வாறதெப்ப

வாங்கஎண்டுசெல்லி நாங்க
வாசலில பாய்போட்டு
கதச்சிரிக்கும் காலம் நாம
கண்ணெறயக் காணுறெப்ப

பொங்கல் இனிப்பும் ஒங்குட
பொறவளவு முக்கனியும்.
காந்தச் சிரிப்பும் - நெக்கிக்
கடசிவெர மறக்குதில்ல

அல்லயல்ல நாமெருந்தும்
ஆளாள் மனந்தொறந்து
கதக்க முடியிதில்ல இந்தக்
காயமெல்லாம் மார்றதெப்ப

இருட்டில் வெளக்கிரிக்கி
இருட்டிருந்தாக் கொடயிரிக்கி
புளிச்சா இனிப்பிரிக்கி எப்ப
போறவாறதோ தெரியா

காலும் நெலமுமிஞ்ச
கடுகளவும் சண்டயில்ல
காடுமில்ல முள்ளுமில்ல இப்ப
கடக்கமனம் கூடுதில்ல

சாதிமதம் பாத்து எந்தச்
சஞ்சலமும் வாறதில்ல
கோத்திரங்களாப் பிரிஞ்சி நாம
கொண்டுபோற தொண்டுமில்ல

நெஞ்சிலயும் வஞ்சமில்ல
நெனப்பிலயும் குத்தமில்ல
அஞ்சாறுபேர் போட்டநஞ்சி - அந்த
அனுபவத்தக் கண்டயளோ

கலையும் வெளயாட்டும் நல்ல
கனிவுதாற நல்கொணமும்
பொறுமக் கனியும் நாம
போக வெரக் காக்குமிஞ்ச

நாறினதப் போய்ப்பெரட்டி
நடுவிலுள்ள மண்ணெடுத்து
ஆராச்சி செஞ்சி - இது
அறவே சொகமாகுறெல்ல.

தம்பிலுவில் பாலும் நம்முட
தைக்காவடி மாம்பழமும்
தொட்டத்துத் தேனும் நல்ல
சொகம் தெருமாம் தின்னுவமோ.

நாட்டார் பாடல்களுள் "கவி" என்பது தனித்துவமான ஒரு பாடல்வகை கிழக்கிலங்கையின் சிறப்பு நாட்டாரிலக்கியக் கூறு எனவும் குறிப்பிடலாம் இங்குள்ள பழம்பெருங் கிராமங்களில் வாழ்ந்த வரகவிகள் சந்தர்ப்பத்திற்கும் தேவைக்கும் ஏற்றாற் போல், கவிகளை இட்டுக்கட்டிப் பாடியுள்ளனர். அவை பரம்பரை பரம்பரையாக வாய்மொழியாகப் பேணப்பட்டு பின்னர் தொகுக்கப்பட்டிருக்கின்றன. சு.வித்தியானந்தன். முதல் 'அனார்' வரை தொகுப்பாளர் வரிசை நீண்டு செல்கிறது.

ஏடறியாத வரகவிகளால் பாடப்பட்ட இத்தகைய கவிகளுக்கு நிகராக கிராமியப் பண்பு குறையாமலும் உரிய ஒசையில் (High piteh) பாடுவதற்கு உரிய முறையிலும் கவிகளை ஆக்கவல்லமையுள்ளவரை இக்காலத்தில் காண்பது அரிது.

இத்தகைய அரிதான ஒரு துறையில் சற்றவர்கள் அதிகமாக கவனம் செலுத்திய பிரதேசம் என்றவகையில் அக்கரைப்பற்றுக்கு முதன்மையுண்டு. எம்.ஐ.எம் ஜெலீல் அக்கரைப்பற்றைச் சேர்ந்தவர். தனது ஆரம்பக் கல்வியை அக் / ஸஹ்றா வித்தியாலயத்தில் ஆரம்பித்து, அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியில் க.பொ.த சாதரம் வரையில் கற்றுத் தற்போது வீதி அபிவிருத்தி அதிகார சபையில் பணி செய்கின்றார்.

நாட்டார் இலக்கியத்துறையில் அதிக ஈடுபாடுடைய நல்லதிபர் மர்ஹூம் ஏ.ஆர்.எம் சலீம் அவர்களின் மூலம் கவி உலகிற்கு அறிமுகம் செய்யப்பட்டவர். "தான் தரம் 09இல் கற்றகாலத்தில் (1987) ஏ.ஆர்.எம் சலீம் சேர் என்னையும் கவி பாடவைத்தார்" என்று தன் கவி உலகப்பிரவேசம் குறித்து ஜெலீல் பேசிக்கொள்வார்.

அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனைப் பிரதேசங்களின் விழா மேடைகள், கலாசாரப் போட்டிகளில் இவரது கவிப் பொழிவை நான் பலமுறை ரசித்து இருக்கின்றேன். கிராமத்து மொழியை லாவகமாக கையாளும் திறனும் கவிக்குரிய ஒசையுடனும் உணர்ச்சியுடனும் பாடுகின்ற திறனும் இவரிடமிருக்கும் தனித்தன்மைகள் எனக் கூறலாம். "தண்ணீருக்கு வந்த தாகம்" எனும் நூல் இதற்குச் சிறந்த சான்றாகும்.

நாட்டாரியல், முனைப்புள்ள ஆய்வுத் துறையாக வளர்ந்துவரும் இக்காலகட்டத்தில்; வாய்மொழி மரபு, ஒரளவு நிலைப்பட்ட வாய்மொழி மரபுக்கு அப்பால் புதியதொரு மரபை வெளிப்படுத்தும் இவரது கவிகள் இத்துறைசார் ஆய்வாளர்களுக்குப் பயன்தருவதோடு, ஆய்வாளர்களுக்கும் பெருவிருத்தம் என்பதில் ஐயமில்லை.

எம்.ஐ.எம் ஹனிபா
உதவிக் கல்விப் பணிப்பாளர் - தமிழ்மொழி
வலயக்கல்வி அலுவலகம், அக்கரைப்பற்று.

ISBN - 978-955-4628-10-6
978-955-4628-10-6

Effke.com Print @ City point - Akp (0718218400, 0777668542)